பதிவு எண் M. 4900 16 பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 2-7-1949 சனிக்கிழமை } மலர் 43.

## அந்தணர் அ(ந்த)ரங்கம்!

கண்ணிருந்தும் குருடராய், வாயிருந்தும் ஊமையராய், இல்லாமை போதாமை ஆகிய பசிப்பிணிகளால் பெரிதும் தாக்குண்டு நலிந்தோராய் வதியும் பாமரர்களை பெருவாரியாகக்கொண்டது திராவிடம். இந்நாட்டின் முதுகெலும்பு போன்றதுமாகும் திராவிடர் சமுதாயம். பீடிக்கும் பிணிகளுக்கும், படும் அல்லல்களுக்கும் தாண்டவமாடும் தற்குறித் தனத்திற்கும், சாதியில் இழிந்தோராய் கருதப்படுவதற்கும், காலில் நகம் முளைத்த நாள்முதலாய் உழைத்துழைத்து உருக்குலையும் நிலை பெற்றதற்கும், உழைப்பின் பலனை உன்மத்தர்கள் உண்டு களிப்பதற்கும் "அவன்" தான் காரணம்—அது வேதன் விதி—நாதன் கட்டளை என நம்பிக்கிடக்கும் அப்பாவிகளும் இவர்கள்தான். இவர்கள் எதையும் நம்புவார்கள், எதற்கும் அஞ்சுவார்கள். பாரதியார் கூறுவதுபோல இவர்கள் அஞ்சாத பொருளில்லை அவனியிலே. இத்தகைய மக்களின் அறியாமையைத் துடைக்க முயன்ற அறிஞரெல்லாம் "சமூகத்துரோகிகள்" என்றே தூற்றப்பட்டார்கள்—கற்பனைக் காவியம் பல புனையப்பட்டு மீளாப் பழி பல சுமத்தப்பட்டார்கள். அன்பு வழி நின்று அறத்தைத் துணைகொண்டு (ஜைன மத வரலாற்று ஆதாரப்படி) ஆட்சிபுரிந்த ஆண்மையாளன்— இலங்கைவேந்தன்—இராவணப்பெருமாள் அரக்கன் எனக் கருதப்பட்டார். அறியாமை உயர்சாதிக் கொடுமை ஆகிய ஆரிய மதப் பிடியினின்றும் விடுபட புத்தர் பெருமான் கண்ட "அறிவியக்கம்" நாடு கடத்தப்பட்டது. மக்கள் மத மூட நம்பிக்கைகளினின்றும் விடுபட பணிபுரிந்த மேலோர்- வடலூர் இராமலிங்கம் குழிதோண்டி புதைக்கப்பட்டார்; அதாவது "ஜோதி"யில் கலந்துவிட்டார். இந்நாட்டின் வரலாறே ஒரு விசித்திரம்—சோகச்சித்திரம்-கண்ணைக் குளமாக்கும் காதை—வஞ்சக விபீஷணர்கள் பட்டியல். அவைகள்தான் இன்றும் நமது இளஞ்சிறார்கள் படிப்பதற்குரிய ஏடுகளாயிருக்கின்றன. இத்தகு ஏடுகள் தீட்டி ஏதுமறியாதாரை ஏமாளிகளாக்கும் எத்தர்கள்தான் வேதவித்தகர்களாம்!

அத்தகையோரை ஆதரிப்போர் ஆழ்வாராதிகளாவார்கள், அம்பலப்படுத்துவோர் அரக்கர்களாவார்கள். அவர்கள் எல்லாம் செய்தார்கள், எதையும் செய்கிறார்கள். அவர்கள் ஆக்கவும் அழிக்கவும் சக்திபடைத்தவர்கள். மதந்தான் அவர்களுக்கு ஆயுதம்—புராண இதிகாசங்கள் அனைத்தும் கேடயமாகும். அவர்கள் எதைச் செய்தாலும் "லோக க்ஷேமத்திற்காகவே என்பார்கள்—மக்களும் நம்புவார்கள். அவர்கள் சுட்டுவிரல் அசைத்தால் ஆடும் இந்த உபகண்டம்—ஆடுகிறது. அவர்கள் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரிவரை எங்குமிருப்பார்கள். காங்கரசிலும் இருப்பார்கள் கம்யூனிஸ்டு கட்சியிலுமிருப்பார்கள்—சோஷலிஸ்ட் கட்சியிலுமிருப்பார்கள், சொர்க்கலோக வழிகாட்டிகளாகவுமிருப்பார்கள் — அக்கிரகாரத்திலுமிருப்பார்கள் அய்க்கிய நாட்டு சபையிலுமிருப்பார்கள்—பர்ணசாலையிலுமிருப்பார்கள் பாராளுமன்றத்திலுமிருப்பார்கள்; சர்வ வியாபியாம் விஷ்ணுவின் அம்சம்—பிரம்மன் முகத்தோன்றல்கள்—பூதேவர்கள்!

அத்தகைய பிரம்ம சிருஷ்டிகளைத்தான் இன்று பலர், அல்ல சிலர் விழிப்புடன் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள். இந்த விழிப்பின் பயனாகத்தான் இவ்வுபகண்டத்தின் பல பாகங்களிலும் குறிப்பாகச் சென்னை மாகாணம், மத்தியமாகாணம், பம்பாய் மாகாணம், ஷோலாப்பூர் சமஸ்தானம், மாராஷ்டிரப் பிரதேசம் ஆகிய பல விடங்களிலும் "ஆரிய எதிர்ப்பு முன்னணி" அமைக்கப்பட்டுள்ளது. அவைகள் ஸ்தாபன ரீதியாக இல்லையாயினும் இத்தகைய உணர்ச்சி மக்களிடத்தில் உண்டாகச் செய்தது சாமானிய காரியமன்று. இந்தச்சேதி ஆரிய பத்திரிகையுலக இருட்டடிப்புத் திரையைக் கிழித்துக் கொண்டு வெளிவந்து விட்டதென்றால், ஆங்காங்குள்ள நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை யூகிக்கலாம். ஆரியத்தின் அஸ்திவாரத்தில்வெடிமருந்து வைக்கப்பட்டுள்ளது என்றே பொருள்; அது என்றைக்கோ ஓர் நாள் வெடித்தே தீரும். பிறகு ஆரியம் தூள்...தூள்...!

'காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ' எனப் புரட்சிக்கவிஞர் கூறுவதைப் போல ஆரியம் எவ்வளவுதான் ஸ்தாபன ரீதியாக இருட்டடிப்புமுறையைக்கையாண்டாலும் "அறிவியக்க ஒளி" யிதழ்

(... பார்க்க)

மறைப்பதென்பது இனி இயலாது. இதனை நன்கு புரிந்துகொண்ட ஆரியம் தனது ஆக்கிரமிப்பை பல துறைகளிலும் செலுத்த முற்பட்டு விட்டது.

அண்மையில் பல இடங்களிலும் மக்களின் நலனுக்காக என்று கூறி "பொறுப்பாட்சி" (Responisble Government) கிளர்ச்சிசெய்தது ஆரியம், மக்களின் துணைகொண்டு. ஆம், கிளர்ச்சி செய்தது ஆரியம்தான். சுதந்திர உணர்ச்சியோடு மக்கள் கிளர்ச்சி செய்திருந்தால் வயது வந்தோருக்கு வாக்குரிமை தந்து தகுந்த பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் சமஸ்தானங்கள். சுருங்கச்சொன்னால் மனித உரிமை (Civil Rights)க்கே ஆபத்துண்டாக்கி விட்டது. அத்தகைய சமஸ்தானங்களில்—துப்பாக்கியின் துணை கொண்டு தரைத்தனம் நடத்துகிறது ஆரியம்.

இவ்வித சமஸ்தானங்களிலே குறிப்பிடத்தக்கது ஹைதராபாத். அங்கே நைஸாம் ஓர் பதுமை—ஆரியம் அரியணை ஏறிவிட்டது. நடப்பது ராணுவ ஆட்சியா? ஆரிய—பார்ப்பன ஆட்சியா? என்பதுகுறித்து பெருத்த ஐயம் எழுந்துவிட்டது. சென்னை மாகாண முப்புரி நூலார் மின்னல் வேகத்தில் சர்க்கார் உத்தியோகங்களை கைப்பற்றி வருகிறார்கள். நிஜாமும் பிறரும் தமது சமஸ்தானத்தில் பொதுவுடைமை பரவி வருவதை மிகக் கூர்ந்து கவனித்து அதற்கான தடுப்பு முறைகளை கையாண்டுவரும் நேரத்தில் ஆரியத்தின் இந்த அந்தரங்க படையெடுப்பை கவனிக்க நேரமேது—ஆளேது? கவனித்தாலும் வெளியில் சொல்லமுடியுமா? சொன்னால் அத்தகையோரை கலாம் விளைவிப்போர் என்று கூறி "கம்யூனிஸ்ட் பட்டியலில் சேர்த்து "இராம ராஜ்யம்" செய்துவிடாதா ஆரியம்!?

சமஸ்தானத்தின் இன்றைய நிலை யென்ன? மக்கள் 'நிம்மதி-அமைதி—சுகம்' இவை மூன்றும் மற்று கிடக்கின்றார்கள். எங்கு நோக்கினும் பட்டினிப் பஞ்சம் தாண்டவமாடுகிறது, தற்போதைய சூழ்நிலையின் காரணமாக. இத்தகைய நெருக்கடியான நேரத்தில் ஆரியம் அங்கே என்ன செய்கிறது தெரியுமா? செத்த மொழியாம் சமஸ்கிருதத்தைப் பரப்புகிறது! பஞ்ச நிவாரணம் தேவைப்படும் நேரத்தில், மக்களுக்கு பஞ்சகவ்யம் வழங்குகிறது." சமஸ்தானத்தின் நிலையென்ன? உடனடியான தேவை சமஸ்கிருதமா? ஆளும் வாய்ப்பு ஆரியத்திடம் சிக்கிவிட்டால் வேறென்ன செய்யும்? அங்கு ஆரிய மொழி சமஸ்கிருதத்திற்கு மேலும் பல சலுகைகள் தரப்படுகிறதாம். அதாவது இதுவரை தரப்பட்டுவந்த சர்க்கார் "கிராண்ட்" தொகை இரட்டிப்பு ஆக்கப்பட்டிருக்கிறதாம்!

இந்த சேதியை நமக்குத் தந்தது "விடுதலை" "திராவிடநாடு" போன்ற (10,000, 3000 என ஜாமீன் தொகை கக்கிக்கொண்டுள்ள) கருஞ்சட்டை ஏடுகளல்ல. ஊராள்வோரை மிரட்டிடும் ஆற்றல் பெற்றவரும், அனைத்திந்திய (ஆரியப் பனியா) பத்திரிகாசிரியர் சங்கத்தைத் தன் மடியில் வைத்திருப்பவரும், தென்னிந்திய பத்திரிகா(சி)ரியர் சங்கத்தைத் தன் துணை ஆசிரியர் முப்புரியில் (வேறெவரும் கைப்பற்றாமல் இருக்க வேண்டி) முடிபோட்டு வைத்திருப்பவரும், ஆர்.எஸ்.எஸ். இந்துமகா சபை எனப்படும் அனைத்திந்திய ஆரியப் பாதுகாப்பு ஸ்தாபனங்களை (தகுதிக்குமேல்) விளம்பரப்படுத்தும் முழுப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளவருமான "ஸ்ரீ" கே. ஸ்ரீநிவாசன் (அய்யங்கார்) அவர்களால் நடத்தப்படும் "ஹிந்து" தனது 20-5-49 தேதி இதழில் தந்துள்ள சேதி இது; "Mr. D. S. Bakhle, Chief civil Administration announced that the Hyderabad Govt. had doubled the grant to the Sanskrit Collage.

அம்மட்டுமா; சமஸ்கிருத வளர்ச்சியில் மிக அக்கரை கொண்டுள்ள சமஸ்தான ஆரிய உத்தியோகஸ்தர் பலரில் குறிப்பிடத் தகுந்த இரண்டு நபர்களும் சமஸ்கிருத வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் எண்ணத்துடன் 13-5-49-ல் நடைபெற்ற மேற்படி விழாவில் கலந்து கொண்டார்கள் என்று அது மேலும் பெருமிதத்தோடு அறிவித்துள்ளது. அது இது: "Mr Seshadri and Mr. P. H. Krishna Rao, Members of the Military Govt. and a member of Officials and Non-Officials were present".

இதனை நாம் ஏன் குறிப்பிட்டோமெனில் நம் திராவிட மொழி—கலாச்சார வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ளதாக ஒரு திராவிட உத்தியோகஸ்தராகிலும், குறிப்பாக ஒரு திராவிட மந்திரியாகிலும் காட்டிக்கொள்ள முடியுமா என்பதை சுட்டிக்காட்டத்தான். அப்படி ஒரிருவர் முன்வந்தாலும் ஆரிய பத்திரிகைகள் அவர்களை அவ்வப் பதவிகளிலே நிலைக்க விடுமா? நம் இனத்தைச் சார்ந்த சுப்பராயன்களையும் ஆதித்தன்களையும், சகஜானந்தங்களையும், அண்ணாமலை—உபயதுல்லா—வேதரத்தினம் கம்பெனிகளையும் தமக்குச் சாதகமாக வேலை செய்யப்பயன் படுத்துமேயல்லாது நமது மொழி-கலாச்சார உயர்வுபற்றிப் பேசுவோரை சும்மாவிடாது. வீரர் பரம்பரையிலே உதித்த கோழைகள்தான் நம்மவரில் பெரும்பாலோர் என்பதை வெட்கப்படாமல் கூறித்தானாகவேண்டும்.

நாசிஸம்—பாசிஸம்—சர்ச்சிலிஸம்—ட்ரூமனிஸம் இவையனைத்தையும் சிந்தாமல் சிதறாமல் விழுங்கி ஜீரணம் செய்து விட்ட ஆரியமே, உன்னைக் கண்டு நாணுகிறது ஜனநாயகம்! எனினும் இந்நாட்டில் நீதான் உலவுகிறாய் ஜனநாயகப் போர்வையில். நீதான் பேசுகிறாய் காந்தீயம். நீதான் பாரதி கீதம் பாடுகிறாய். சமதர்மசாரத்தைக் காந்தீயத்தேனில் கலந்தூட்டுவதாகப் பசப்பும் ஆரியமே! நீ பூணூலைக் கழற்றி வீசலாம்; நெற்றிக் குறியை அகற்றலாம். ஆனால் அவையனைத்தும் உன் உள்ளத்தினின்றும் பிரிக்க முடியாத நிலையெய்தி விட்டனவென்பதை மட்டும் நாமறிவோம். சமயம் வாய்த்தால் ஹிந்தி ரூபத்திலே சமஸ்கிருதம் போதிப்பாய்—சஹஸ்ரநாமம் பாடுவாய். அதனை அரங்கேற்றிக்கொள்ள அந்தணர் அரங்கத்தையும் அமைத்துக் கொள்ளுவாய். நின் சாகசத்தை அறியாதவரல்ல நாம். அன்றாட வாழ்க்கையில் அந்தணத் தன்மையை அணுவளவேனும் அனுசரிக்காத நீ அந்தணர் போர்வையில் நடமாட எத்தனிப்பது கேலிக் கூத்தாகும்.

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

# புண்ணியக் கிரியைகள்!

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

**ஸ்நானயாத்திரை:**

பெரிய வட்டக் கண்ணும், கூரிய வளைந்த மூக்குமுள்ள—பெரிய ஆந்தை முகத்தைப் போன்ற ஜகந்நாத சொரூபத்தை ஒரு கிணற்றிற்குக் கொண்டுபோய் சில சடங்குகள் செய்து, ஸ்நானம் செய்வித்து, ஒரு அறையில் சுமார் 15 நாட்கள்வரையும் வைத்துவிடுவார்கள். அந்தச் சமயத்தில் சாமி, ஸ்நானம் செய்த காரணத்தால் சளிபிடித்து வியாதியுற்றிருக்கிறதென்று பக்தர்களுக்குச் சொல்லி, மக்களை வராதபடி—விக்ரகத்தைப் பார்க்காதபடி அறையின் கதவைச் சாத்திவிடுவார்கள்—கோவில் பூஜை, ஆராதனைகளையும் நிறுத்திவிடுவார்கள். எதற்காகத் தெரியுமா இந்தப் புரட்டுக்கள் அனைத்தும்? இந்த நாட்களில் சுவாமியின் உருவங்களுக்கு வர்ணம் பூசுவதற்குத்தான்! இவையெல்லாம் பக்தியின் விளைவா?—கேலிக்கூத்தா? — கரங்கொட்டிச் சிரிக்கவேண்டிய பித்தலாட்டங்களா? சிந்தித்துப்பார்த்துத் தீர்ப்புக் கூறுங்கள்!

**ரத உற்சவம்:**

வர்ண வேலைகள் முடிந்தபிறகு ரத உற்சவம் நடக்கும். புதிதாக வர்ணம் பூசப்பட்ட-பளபளவென மின்னிக்கொண்டிருக்கும் சாமிகளை மூன்று பெரிய தேர்களில் வைத்து, மூன்று மைலுக்கு அப்பாலுள்ள அம்மன் வாசம் பண்ணுகிற பூரி என்னும் கோவிலுக்குக் கொண்டுபோவார்கள். மணல் தரையானபடியால் தேரை இழுத்துச் செல்ல நான்குநாட்கள் பிடிக்கும்! இவ்வாறாகச் சாமி, அம்மன் சன்னதியை அடைந்தபிறகு, இலக்குமியம்மனும் சாமியை எதிர்கொண்டழைத்துவந்து, இருவரும் நான்கு அல்லது அய்ந்து தினங்களுக்குமேல் கூடிக்களித்த பிறகு சாமியை முன்போல் ரதத்திலேற்றிஇழுத்துக்கொண்டுபோய்விடுவார்கள். இந்ததெய்வங்களிரண்டும் கூடிக்காமக்களியாட்டங்கள் புரிந்து மகிழ்வதற்காகப் பள்ளியறை—சம்பிரதாயமான அலங்கார ஆகாராதிகளுடன் கொலு நிர்மாணிக்கப்பட்டிருக்கும்! இந்தப் பள்ளியறைக்குள்ளேதான் சாமியையும் அம்மனையும் படுக்கப்போட்டு கதவை இழுத்துப் பூட்டிவிடுவார்கள். இந்தத் திருவிழாக் காலங்களிலே குருக்கள் கூட்டத்திற்கு ஏகக் கொண்டாட்டம்தான்!

இவற்றையெல்லாம் ஆராயும் பொழுது—இந்தக் கேலிக்கூத்தையெல்லாம் நாம் பார்க்கும்போது, சிறுவர்கள் கல்லையும் ஒடையும் வைத்துச் சாமி விளையாட்டு நடத்திய பண்பு வயதுக்கு ஏற்ப கற்பனை வளர்ச்சியுடன் முதிர்ச்சியடைந்துவிட்டது என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. பக்தி என்ற போர்வையில் பெரிய மனிதர்கள் விளையாடும் பொழுது போக்கு ஆட்டம்தான் கோவில், சாமி, திருவிழா, யாத்திரைபோன்றவை! அதுமட்டுமல்ல, அர்த்தமற்ற — ஆடம்பரமான — ஏராளமான பொருளுக்கு உலைவைக்கிற விளையாட்டாகும்!

இவை இன்னும் நீடித்து வளரலாமா? அறிவு வளர்ச்சி பெற்றுவரும் இந்நாளில், இவைபோன்ற அறியாமையின் விளைவுகள்—நகைப்புக்கு இலக்காகிற திருவிளையாடல்கள் நாட்டிலே நடைபெறலாமா?—நடக்கவிடலாமா?—அது உங்களது மனதில் தைக்கவில்லையா? பழமைப்பித்தர்களே! பிற்போக்குக் கும்பல்களே! சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்!

காசியில் இறந்தபேர்க்கும், கமலாலயமாகிய திருவாரூரிலே பிறக்கிற பேர்க்கும், அருணாசலத்தை மனதிலே நினைப்பவருக்கும் தில்லையைத் தரிசித்த பேர்க்கும் பாவ மன்னிப்பும், மோட்ச சாம்ராஜ்யத்திலே இடமும் கிடைக்குமாம்!

தோழர்களே! ஆயிரக்கணக்கான மைல்கள் தூரமுள்ள காசிக்குப் போய் பெறற்கரிய அருமையான உயிரை மாய்த்துக்கொள்ளுவதும், கர்ப்பகாலங்களில் திருவாரூரிலே பெண்கள்சென்று தங்கியிருந்து பிள்ளைபெற்று வளர்ப்பதும், சிதம்பரத்திற்குப்போய் நிர்வாணமாய் நின்று சாமியைத் தரிசிப்பதும் எவ்வளவு மதியீனம்? ஏன் இவ்வாறு கூறுகிறேனென்றால், எவ்வளவோ பொருட் செலவும், மெய் வருத்தமும் பாராது மக்கள், அவரவர் இருக்கிற இடங்களிலேயே இருந்து அருணாசலமென்றும், சிதம்பரமென்றும் மனதிலே நினைத்துக் கொண்டாலும், பிள்ளைகளுக்குப் பெயர் வைத்து அழைத்தாலும் முக்தி கிடைக்குமென்று புராணங்கள் கூறியுள்ளதே! இதனை அசட்டை செய்து அருணாசலத்திற்கும் மற்ற இடங்களுக்கும் யாத்திரை செய்வது பைத்தியக்காரத் தனந்தானே? அருணாசலத்தில் இருக்கிறவர்களுக்குப் பையித்திய சயித்தியவாத நோய்கள் இல்லை என்று கதைக்கிறார்களே, மதப்பாதுகாவலர்கள்! இதுஉண்மையாயின் இவ்விதநோய் உள்ளோர் அங்கு இல்லை என்று என்முன்வந்து கூறட்டும்!...கூறமுயாது! ஏன்? அவ்வளவும் புரட்டு-மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் சூழ்ச்சி!

"ஒருக்காற் சிவசிதம்பர
மென்று நீ சொன்னாலிருக்கா
தூழ்வினையே
கருக்கானெறிக்கித்துத்
தெரியும் பொதுவிலொருக்
காலைத் தூக்கிநின்ற
கோலத்தை மனதில்வைத்து—
ஒருக்கால் சிவ"

சுடலை வாசியான சிவனார், தேவர்கள், முனிபுங்கவர்கள் வீற்றிருந்த சபைமுன் தன் மனைவி பார்வதியோடு கூத்தாடும்போது, நாணமின்றி ஒரு காலைத் தூக்கித் தன் நிருவாணத்தைக் காண்பித்த அயோக்கியச் செய்கையை நினைவுபடுத்தி, சிவ சிதம்பரம் என்று ஒரு முறையாவது சொன்னவர்களுடைய ஊழ்வினை யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்—வேறு நியம நிஷ்டைகள் வேண்டியதில்லை என்று பக்த சிகாமணிகள் பாடுவதே மேற்கண்ட பாடலின் சாரம்!

இந்தப் பாடலை நாம் நன்கு ஆராயும்பொழுது, இப்படியும் ஒரு கடவுள் இருக்குமா?—என்று தானே எண்ணவேண்டியிருக்கிறது. இதனை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து, இத்தகைய பகுத்தறி

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# கூலி

★

“அது யாரது அங்கே போறது, வெட்டியானா?”

“ஆமாங்கசாமி, கும்பிட்றேனுங்க”

“சேரில்லே டள்ளன் பரதேசி இருந்தான்னா நான் சீக்கிரம் வரச் சொன்னதாச் சொல்லு”

“சொல்றேனுங்க”

“ஆமா, சீக்கிரம் போய் சொல்”

கிராம முன்சீப் கெங்காதர நாயுடு தன் பருத்த உடல் திண்ணையில் போடப்பட்டிருந்த திண்டில் கிடக்க, தனது பலூன் போல் உப்பியிருந்த தொந்தியை தடவிக் கொண்டு, சுருட்டு ஒன்று வாயில் புகைந்து கொண்டிருக்க பள்ளன் பரதேசிக்காகக் காத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் பரதேசி அவர்முன்னால் வந்து நின்று வணங்கினான். அவனுக்கு முன்சீப் தன்னை ஏன் அழைத்தார் என்பது தெரியும். அவன் முகத்தில் அச்சத்தின் அலைகள் படர்ந்திருந்தன.

“ஏண்டா பரதேசி இதோட உன்னை நூறாவது தடவையா கேட்டுட்டேன். ஒவ்வொரு தடவையும் ஏதாச்சும் சால் ஜாப்புச் சொல்லிக்கிட்டு வந்துட்டே. இனிமே அந்த பாச்சா ஏங்கிட்டே பலிக்காது. இன்னம் இரண்டு நாளைக்குள்ளே கணக்கே பைசல் செய்லே......அப்புறம் கோர்ட்லே கேஸ் தாக்கல் செய்யறதைத் தவிர வேறே வழியே இல்லை. மானம்... மரியாதை எல்லாத்தையும் காப்பாத்திக்கணுமின்னா போய் ரூபாயை எப்படியாவது கொண்டாந்து கணக்குத் தீத்துக்கப் போ...!?

*  *

உழைப்பு என்பது இன்னது என்பதறியாது உண்டு களித்திருக்கும் அம்மனிதர், ஊராருக்கு உழைத்து உழைத்து உருக்குலைந்து போயிருக்கும் அவ்வுத்தமனைப் பார்த்து இப்படிக் கூறினார். பணம் பஞ்சையை மிரட்டுகிறது. பரதேசி தன்வாயைத் திறக்கவேயில்லை. கலங்கிய கண்களுடன் தன் வறண்ட தலையைக் கவிழ்த்துக்கொண்டே சென்றான். முன்சீபிடம் கடன் வாங்கிய ஓர் இருநூறு ரூபாய் அவனை இந்த இக்கட்டான நிலையில் கொண்டு வந்து விட்டு விட்டது.

வயது நாற்பதுஇருக்கும். தனது மனைவியுடனும் ஒரே மணமாகா மகளுடனும் வாழ்ந்து வந்தான். அவனுக்கு சொத்தென்று இருந்தது ஒரு சின்னஞ்சிறு குடிசைதான். அதிலும் ஓராயிரம் ஓட்டைகள். மழை பெய்தால் வீடு வெள்ளக்காடுதான். இந்நிலையில் அவனது கடன்பட்ட நெஞ்சம் கலங்கி கதறியது.

கவிழ்ந்த தலையுடன் தன் குடிசையில் காலெடுத்து வைத்தான். அப்படியும் வாயிலின் நிலை அவன் தலையில் இடித்து விட்டது. “அம்மா” என்று கலங்கிய குரலில் கத்தி விட்டான்.

“அப்பா” என்று அலறி அடித்துக்கொண்டு அடுப்படியில் இருந்த அவன் மகள் அலமேலு, ஓடிவந்து அவனைத் தன் அணைப்பில் வைத்து, மெதுவாகக்கீழே கிடந்த கிழிந்த பாயில் அமர்த்தினாள். அவன் தலையைத் தன் மிருதுவான கரத்தால் தடவிக்கொண்டே, கனிவும் கலக்கமும் தோன்ற......

“ஏம்பா முன்சீப் ரொம்ப சண்டை போட்டாரோ” என்று கேட்டாள்.

“ஆமாம்மா...இன்னம் இரண்டு நாளைக்குள்ளே பைசல் செய்யலேன்னா கோர்ட்டிலே தாக்கல் செஞ்சுடுவாராம்”

அவளது மென்மையான உள்ளத்தில் ‘கோர்ட்’ என்ற சொல் தாக்கியதும் பதறி விட்டாள். ஏழை நீதிமன்றம் ஏறினால், அப்படியே சிறைக்குத்தான் செல்ல முடியுமே தவிர மீளமுடியாதே!” அப்படி நேர்ந்தால் நோயினால் அலைக்கழிக்கப்பட்டிருக்கும் தன் தாயுடன் தெருத்தெருவாகப் பிச்சை எடுக்க வேண்டியதுதான். அப்பப்பா......என்னென்ன கேடுகள் காத்திருக்கின்றனவோ? யார் கண்டார்கள்?

“அப்பா இந்தக் கஷ்டத்திலேருந்து தப்பிக்கிறத்துக்குவழியே இல்லியா”?

“ஒன்னும் தெரியிலேயே அம்மா”

“ஏம்பா கெண்டிலேருந்து காளியாப் பிள்ளை வந்திருக்கிறாரேமே...அவருக்கிட்டே பணத்தை வாங்கிக் கடனைக் கட்டிப்பிட்டு அவருக்கூடேயே கெண்டிக்குப் போய் சம்பாதிச்சி கடனைக் கட்டிப்பிடலாமே அப்பா?”

“நல்ல யோசனையாத்தாம்மா தெரியுது. ஏதோ அழுதுபிடிச்சு அவருக்கிட்டே கேட்டுப் பாக்கிறேன். அப்புறம் மாரியாத்தா விட்ட வழி”

*  *

“மாரியாத்தா தயவினாலே” தொல்லைகள் எல்லாம் முடிந்து விட்டன. பரதேசி முன்சீப்புக்குக் கொடுக்க வேண்டிய கடனை ‘கண்டி’ கங்காணி ஏற்றுக்கொண்டு விட்டார்.

கங்காணியுடனேயேபரதேசி தன் குடும்பத்துடன் இலங்கைக்குப் போவது என்றும் ஏற்பாடாயிற்று.

*  *

கூலிகளாய் இலங்கைக்குப்போகிறவர்கள் ‘லேபர் கமிஷன்கள்’ மூலமாய்த்தான் போகவேண்டும். லேபர் கமிஷன்கள் என்றால் அங்குள்ள பியூன்களும் அவர்தம் உருட்டும் விழிகளும்தான் நம் கண்முன்னால் தோன்றும். இவர்கள் கூலிகளை நடத்தும் போக்கிருக்கிறதே அதற்கு ஈடு இணையே கிடையாது. மக்கள் இவர்களின் நோக்கிலிருந்து தாண்டி போகும்வரை அவர்கள் நாய்களைப் போலத்தான் நடத்தப் படுகிறார்கள். மரியாதை, கனிவு, நயம்-அவர்கள் சொற்களில் இவை சிறிதும் இருக்காது. மக்கள் அடையும் துன்பம் ‘மண்டபம் கேம்பில்’ உச்ச நிலையை அடைந்துவிடும். அங்கு அவர்கள் ஏழு நாட்கள் ‘தவம்’ இருக்க வேண்டும்.

மண்டபம் சேர்ந்தவுடன் தன் மனைவிக்கு அம்மை கண்டுவிட்டதால் பரதேசி மேலும் ஏழுநாட்கள் அங்கிருந்து உழலவேண்டியதாயிற்று. எப்படியோ உயிர் உடலில் மீந்திருக்க தலைமன்னாரில் ரயில் ஏறிவிட்டார்கள்.

*  *

“பான்! பான்! பான் வேணுமா பான்” என்று கூவிக்கொண்டே

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# காளியின் கருணை?

★

கொடுங்கோலர்களின் பிடியிலிருந்து மக்கள் விடுபட நினைப்பது இயற்கை! ஆனால்; மக்கள் விழித்து விட்டனரே இனி நம் பிடியைத் தளர்த்திக்கொள்ள வேண்டியதுதான் என்று கொடுங்கோலர்கள் எண்ணுவதில்லை! இப்படி இவர்கள் எண்ண மறுப்பதால் மக்கள் சக்தி ஓய்ந்து—மாய்ந்து விடுவதில்லை! மாறாகப் புதுவேகம் பிறக்கிறது. அந்தப் புதுவேகம் புரட்சிப்பாதைக்கு வழிஅமைத்து, புத்துலகு தோன்ற ஏதுவாகிறது!

இந்தக் கருத்தைக் கொண்டே சில பல நூற்றாண்டுகளாக உலகப் போக்கு அமைந்திருப்பதைக்காண்கிறோம். என்றாலும் ஒரு சில இடங்களில் கொடுமைப்பிடி இன்னும் அகன்றபாடாய் இல்லை.

இரத்தக்கறை படிந்த—இந்தியத் துணைக்கண்டத்தின் சரித்திர ஏடுகளைப் புரட்டும் போது...... ஆங்கிலேயக் கொடுங்கோலனை விரட்ட சிந்திய இரத்தத்தைவிட ........இந்துமதம் எனும் கொடுங்கோலனிடம் சிக்கிச் சீரழிந்து ரத்தஞ் சிந்திய—வள்ளல்களின் தொகையே பெரிது! என்ற காட்சிகளே வட்டமிடுகின்றன.

ஏறத்தாழ இந்தியா பூராவுமே ஆட்சி புரிந்த அசோகராகிய புத்தர், இந்துமதக் கொடுங்கோலனை ஒழிக்க முயன்றார்—முடியவில்லை!.........அகில உலக செல்வாக்குப்பெற்ற காந்தியார் இந்து மதக்கொடுங்கோலனை ஒழிக்க அல்ல, அவனைத் திருத்தமுயன்றார்—முடியவில்லை!

ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஆண்ட அரசனாலும்—அகில உலகப் புகழ்பெற்ற அறிஞராலும்—ஒழிக்கவோ அல்லது திருத்தவோ முடியாத "கொடுங்கோலனை" நாம் எப்படி ஒழிக்கமுடியுமென்று மக்கள் சக்தி அயர்ந்து அடங்கி விடுவதில்லை.

பாஸ்டிலி!.........பெயரைக் கேட்டவுடனேயே பதைபதைத்தனர் பிரான்ஸ் மக்கள். ஆனால் நடந்ததென்ன............பாஸ்டிலி பாதை—பதைத்த மக்களாலேயே பாழாக்கப்பட்டது!

இதுபோன்ற பல உண்மைகளை மக்கள் சக்தி அறிந்திருப்பதாலேயே தனது கொடுங்கோலன் எதிர்ப்புப் போரை—இன்றுவரை தொடர்ந்து நடத்துகிறது!

* *

இந்த மேலே தீட்டிய உண்மைகளை நண்பர் 'கல்கி' அறிந்தாரோ—அறியவில்லையோ......... ஆனால் கூச்சல்மட்டும் கிளப்பிவிட்டார் தம் ஏட்டின்மூலமாக!

நம்முடைய இந்துமதம் அத்தகைய தொட்டாற் சுருங்கி மதம் அல்ல. இதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக வலிமையுள்ள எதிர்ப்பிரச்சாரத்தை யெல்லாம் இந்து மதம் வென்று இன்றுவரை நிலைத்திருக்கிறது"...... என்று கல்கி தனக்கேயுள்ள வேடிக்கை நடையில் எழுதுகிறது.

உலக உத்தமர்களின் உயிருக்கு—உலைவைத்த இந்துமதம்!

வீரன் வில்லவனைத் தன் கடைக்கண் வீச்சால் கலங்க வைத்த இந்துமதம்!

மாவீரன் சிவாஜி—அப்சல்கானின் படை பலத்தைக் கண்டு, போர் தொடுப்போமா—வேண்டாமா என்று மனப்போர் நடத்திக்கொண்டிருந்தபோது, "வீண் முயற்சி ஏன் சிவாஜி! அப்சல்கானின் படை கிளப்பும் தூசியில் உன் படை மறைந்துவிடும்" எனக் கூறி வீர சிவாஜியைத் தடுத்து, புலிநகத்தை சிவாஜி கையிலேமறைத்து—அப்சல்கானை வஞ்சகத்தால் வீழ்த்தச் சதி செய்துகொடுத்தான் கோபிநாத் என்ற பார்ப்பனன்... இந்து மதத்தை அகில உலகிலும் நிலைநாட்டலாம் என்ற பேராசை கொண்டு!...கோபிநாத் மூலமாகச் சிவாஜியை—மாவீரனை....வஞ்சகனென்று தூற்றவைத்த இந்து மதம்...! வலிமையுள்ளது—யாராலும் அழிக்கமுடியாதது என்று பெருமை பேசுகிறார் வரலாறு படித்த கல்கி!

காலட்சேபம் செய்யும் கல்கி, இன்ன முறைக்காக இந்துமதம் நிலைத்திருக்கவேண்டுமென்று தன் கட்டுரையிலே விளக்கம் கொடுத்திருந்தால் — கல்லூரியில் அவருக்குப் பாடம் சொன்னவர்களே வெட்கித் தலை குனியும் அளவிற்கு, அவர் படித்த பாடங்களிலிருந்தே விஷயங்களை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கலாம்!

ஆனால் இந்தக் காரியத்தைக் கல்கி செய்தாரில்லை.

மாற்றானிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வாள்வீரன் கேடயம் வைத்திருப்பதுபோல—கல்கி, பேனா வீரர்களிடமிருந்து தப்ப "கர்நாடகம்" என்ற கேடயத்தைத் துணையாகக் கொண்டு...மாற்றானின் எதிர்ப்பைத் தம்மால் சமாளிக்கமுடியவில்லை என்ற நிலை ஏற்படும்போது, 'அதோ பார்புலி' என்று மாற்றானிடம் கூற, அவன் புலி வரும் திக்கை நோக்கும்போது—புன்முறுவலுடன் தன் வாளை மாற்றானின் புறமுதுகிலே பாய்ச்சிடும் வஞ்சக வீரன்போல—கல்கி நம் கழகச் சக்தியின் எதிர்ப்பைச் சமாளிக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டு "வேலைக்காரி" என்ற திரைப்படத்தைச் சுட்டிக்காட்டி "திராவிடக் கழகத்தாரின் நாஸ்தீகப் பிரச்சாரம் தோல்வியடைந்துவிட்டது—ஆகவே இந்து மதம் மிக வலிமையுள்ளது அதை யாராலும் அசைக்கமுடியாது" என்று கல்கி களிக்கிறது!

போரிடத் தெரியாத வீரனைப் போல—விவாதம் புரியும் ஆற்றல் இல்லாத கல்கி "வேலைக்காரி" படத்தைச்சாக்குக்காட்டி கடவுள்—இந்து மதம் பற்றிய தாம் கொண்டுள்ள கருத்தைச் சூட்சமமாகத் தெரிவிக்கிறார்!

இந்தக் கடவுள்—இந்து மதம் பற்றித் தன் கருத்தைச் சொல்ல பெரிய அரசியல்வாதி போல சூட்சமமாக "வேலைக்காரி" மூலமாகக் கூறும் நிலை ஏனோ அவருக்கு ஏற்பட்டு விட்டது! கல்கி நேரிடையாகத்தம் ஏட்டிலே எழுதிக் கேட்டிருந்தால்—நாமும் நேரிடையாக அவர் கூற்றுக்கு விளக்கங் கொடுக்க ஏதுவாய்இருந்திருக்கும்! ஆனால்...வேலைக்காரி என்ற படத்தின்மூலமாகவே தம் கருத்தை அவர் கூறியுள்ளதால் ...அந்த வேலைக்காரி படத்தின் மூலமாகவே கல்கியின் கூற்றுக்கு விளக்கங் கொடுக்கும் நிலை ஏற்படுகிறது.

ஆகவே இங்கு நாம் தீட்டுவது வேலைக்காரி விமரிசனமல்ல! கல்கி

கொண்டிருக்கும் கருத்துக்கு நாம் கொடுக்கும் விளக்கம்.

* *

கல்கி தனது கட்டுரையிலே வேலைக்காரி படத்தில் தோன்றும், கதாநாயகனுக்கு —காளி இறுதி வரைகருணை புரிகிறாள் என வாதாடுகிறார்.

ஆனால் நண்பரின் வாதத்தில் ஒரு வேடிக்கை!

''கல்லிலும் செம்பிலுமோஇருப்பான் எங்கள் கண்ணுதலே?''
என்று கல்கி அதே கட்டுரையில் குறிப்பிட்டு விட்டு ...கல்லுக் காளி கதாநாயகனுக்கு கருணை புரிந்த விதத்தைப்பக்கம்பக்கமாக விளக்குகிறார்.

கல்லிலும், செம்பிலும் கடவுள் இல்லை என்பதைக் கட்டுரையின் முதல் வரிசையிலே ஒப்புக்கொண்டு எழுதி விட்டு—பின்னர் கட்டுரையின் இறுதிக் கட்டத்தில், எல்லாம் கல்லுக் காளி மாதாவின் கருணை என கூசாமல் எழுதுகிறார்!

இதுதான் போகட்டும்,காளியின் கருணையை ஒவ்வொன்றாக வெளியிட்டாரே அதிலாவதுசிறிது நியாயத்தெளிவு இருக்கக்கூடாதா!

"காளி கோயிலிலிருந்து கதாநாயகன் காளியை வைது கொண்டே ஓடியபோது காளி அவன் சிற்றறிவை எண்ணிச்சிரித்திருக்க வேண்டும்! ஏனெனில் அதேசமயத்தில்காளி அவனுடைய நன்மைக்காக என்ன அற்புதங்களெல்லாம் செய்து வைத்திருந்தாள் தெரியுமா''......என்று இது போலக் காளியின் கருணையை விளக்கிக் காட்டுகிறார் கல்கி.

அவரின் கூற்றுப்படி......தன்னைக் கதாநாயகன் வைதுவிட்டு ஓடவேண்டும், இதைக் கண்ட கும்பல் இவனை விரட்டி ஓட வேண்டும்; கஷ்டத்தில் சிக்கிக்கொண்ட கதாநாயகன் எதிரே வந்த மணியின் துணையை நாட வேண்டும், மணி கதாநாயகனைப் பாழுங் கிணமொன்றில் ஒழியும் படி கூறவேண்டும், பின் கதாநாயகன் பிணமூட்டையோடு வெளி வந்து—புதிய மனிதனாக உலவ வேண்டும்....இதுதானே காளியின் கருணைத் திட்டம். இந்தத் திட்டம் தன்னைக் கதாநாயகன் வைய வருவதற்கு முன்பே காளி செய்து வைத்துவிட்டாளாம் — கல்கியின் எழுத்துப்படி! இவ்வளவு முன்னேற்பாடுடன் திட்டம் தீட்டி விட்ட காளி, கல்கி கூறுவதுபோல கதாநாயகனின் சிற்றறிவைஎண்ணி ஏன் சிரிக்கவேண்டும்! காளி தீட்டிய அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவேண்டுமானால்—கதாநாயகன் தன்னை வைதுவிட்டு ஓடவேண்டும்—இதுதானே நியாயம். அதன்படியேதான் கதாநாயகன் வைதுவிட்டு ஓடுகிறான். காளி ஏற்பாடு செய்தபடியேதான் நிகழ்ச்சி நடக்கிறது. இதில் கதாநாயகனின் சிற்றறிவை எண்ணி காளி சிரிக்க எங்கே இடமிருக்கிறது! ஒருவேளை நாம் கல்கியின் சிந்தனைச்சிதறலைக்கண்டுவேண்டுமானால் சிரிக்க இங்கு இடமிருக்கிறது!

ஆகவே அவர் காளியின் கருணையை விளக்கப் புகுந்த இந்த இடத்திலும் குட்டுப்படுகிறார். இதுவுந்தான் போகட்டும். கல்கி புராண இதிகாச புருஷர்களுடன், வேலைக்காரி கதாநாயகனை ஒப்பிட்டு எழுதினாரே இங்காவது அவரது அறிவுத் தெளிவைக் காட்டியிருக்கக்கூடாதா! அங்கும் சோடைதான்!

"இராமன் பதினாலு வருடம் வனவாசம் போனார். பஞ்சபாண்டவர்கள் எத்தனையோ கஷ்டப்பட்டார்கள். பிரகலாதன் இரணியனிடம்பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா? அவ்வளவையும் கடவுள் பார்த்துக்கொண்டிருந்து விட்டுக் கடைசிநேரத்தில்தான் காப்பாற்றுவதற்கு வந்தார்...........இந்த வேலைக்காரியிலும் அப்படித்தான் நடைபெறுகிறது'' என்று புராண புருடர்களுடன் கதாநாயகனை ஒப்பிடுகிறார்!

வனவாசம் சென்ற — இராமர்!
கஷ்டப்பட்ட— பஞ்சபாண்டவர்கள்!
இரணியனிடம் சிக்கிய—பிரகலாதன்!

ஆகியோர், மருந்துக்கு ஒரு முறையாவது பகவானையோ அல்லது அவர்கள் பரம்பரைகளையோ வைததுண்டா என்று கறுகிய கருத்துக்களைத் தந்திடும் கல்கியைக் கேட்கிறோம்!

இராமரோ — பஞ்சபாண்டவர்களோ—பிரகலாதனோ, செய்திடாத ஒரு புரட்சி முறையை வேலைக்காரி கதாநாயகன் கைக்கொள்வதால்தான், அதாவது காளியை ஏசி! அவளுக்குரிய பூஜைப் பொருள்களை நாசப்படுத்திய பிறகு, பக்திப் போதை தெளிகிறது........ பிறகே அவன் வெற்றியடைகிறான்!

இராமர் — பஞ்சபாண்டவர்கள் கனவிலும் எண்ணிடாத ஒரு புது முறையைக் கைக்கொண்டு வெற்றியடைந்த வேலைக்காரி கதாநாயகனை—வெற்றியடைந்தது காளியின் கருணையால்—எனக்கூற முன் வருகிறார் கல்கி!

இந்தக் காலத்தை, செருப்புக் காலால் உதைத்து பூஜைசெய்த—கண்ணப்பர் காலம் என கல்கி எண்ணிவிட்டார் போலும்!

காளியின் கருணை—காளியின் கருணை என்று அவர் வளைத்து, வளைத்து எழுதுவதாலோ என்னவோ அவரது கட்டுரையின் ஓரிடத்தில் நாத்தீகவாடையே வீசுகிறது!

(தொடரும்)

## ஈ. தமிழ் சித்தவைத்திய சங்கம்

ஈரோடு, ஜூன் 21.

நேற்று மாலையில் ஈரோடு தமிழ்ச் சித்த வைத்தியசங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம், சங்கத் தலைவர் திரு. ஈ.வெ.கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

10—7—49ம் நாள் சித்த வைத்திய மாநாடும் ஆண்டு விழாவும், ஈரோடு கரூர்ரோட்டிலுள்ள ஈ.வெ.த. சத்திரத்தில் நடத்துவதெனவும், திரு ஈ. வெ. கி. அவர்களே வரவேற்புத் தலைவர் எனவும் தீர்மானித்து வரவேற்புக்குழுவுக்கு 7பேர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

இந்த மாநாட்டை யொட்டிப் பிரஸ்தாபங்கள் தெரிய விரும்புவோர் செயல்ளாளர் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஜா முத்தையா

# ஹிட்லர் தர்பார்?

## விடுதலை ஜாமீன்பற்றி காண்டீபம் எழுதுகிறது.

★

விடுதலை'என்னும் தினப்பத்திரிகைக்கு 10,000 ரூபாய் ஜாமீன் கட்ட வேண்டுமென சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். அப்பத்திரிகை ஏற்கனவே கட்டியிருந்த 2000 ரூபாய் ஜாமீனும் பறிமுதலாகியிருக்கிறது. இவ்வளவு தீவிரமான உத்திரவுகள் பிறப்பதற்கு என்ன காரணமென்பது தான் தெரியவில்லை. அதுவும் சுயராஜ்ய சர்க்காரில் இவ்வளவு கொரூரமாக ஜாமீன் தொகையைக் கேட்பது விந்தையாக இருக்கிறது.

* *

எனவே சென்னை சர்க்காரில் யாரோ துக்லக் வர்க்கத்தவர் இருந்து கொண்டு, இந்த ஹிட்லர் தர்பார் நடத்தவேண்டு மென்பது உறுதியாகிறது.

* *

இந்த ஜாமீன் தொகை இவ்வளவு அதிகமாயிருப்பது எவ்வளவு அநியாயமோ, அதே அநியாயமான போக்கு இன்னொருவிஷயத்திலும் காணப்படுகிறது. அதாவது ஜாமீன் கேட்க சர்க்கார் சொல்லும் காரணம். வகுப்புத்துவேஷத்தை 'விடுதலை' தூண்டி விட்டதாம். இந்த தூண்டுதலைக் கண்டு சகியாத,வகுப்பு வாத உணர்ச்சியே அற்றவர்கள் மனம் குமுறி இவ்வாறு "பிடிசாபம்'' என்ற உத்திரவை வீசியிருக்கிறார்களாம்.

* *

வகுப்புவாதம்பற்றி பேசுவதோ, பூச்சாண்டி காட்டுவதோ இந்தக்காலத்தில் எடுபடாதுஎன்பதை இவர்கள் உணராமலிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.மேலும் வகுப்புவாத பூச்சாண்டி காட்டுகிற இந்தப்பேர்வழிகளே உள்ளும் புறமும் வகுப்பு வாதத்தை இரும்புப் பூண்போட்டு காப்பவர்கள். இவர்கள் கிளப்பிய கூப்பாடுதான் இந்தஉத்திரவு பிறப்பதற்கே காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

* *

'விடுதலை' விஷயம் 'விடுதலை'யோடவே, தனிப்பட்ட அதிகாரி, மந்திரியுடனோ போவதில்லை. காங்கிரஸ் பெயரையே பாதிப்பதாகும். ஏனென்றால் சர்க்கார் என்பது எல்லோருக்கும் பொதுவானது. கஸ்தூரி சீனவாசய்யங்காருக்கும், சுனா மீனா சீனவாசனுக்கும்,காசா சுப்பராவுக்கும் அதில் எவ்வளவு உரிமை இருக்கிறதோ அதே அளவு உரிமை ராமசாமி நாயக்கருக்கும் உண்டு. முகம்மதுஇஸ்மாயிலுக்கும்உண்டு. எனவே ஒரு சாராரை திருப்திப்படுத்த இன்னொரு சாராரை இம்சிப்பதென்பது தவறு.

* *

'விடுதலை' எவ்வளவு வேகத்தில் வகுப்புவாதப் பிரசாரம் செய்து வருகிறதோ அதே அளவு வேகத்தில் எதிர் சார்புப் பத்திரிகைகளும் செய்து வருகின்றன. இன்னும் சொல்லப் போனால் 'விடுதலை' செய்யக்கூடிய அளவைவிட அவை அதிகமாகச் செய்து வருகின்றன. இது சென்னை சர்க்காருக்குத் தெரியாதா? தெரியாது என்று முட்டாள்கூட கூறமாட்டான்.

* *

ஏனென்றால் இதே சென்னை சர்க்காரை இப்பத்திரிகைகள் தாக்கி வருவது உலகமே அறிந்த விஷயம். "காட்டானும் மாட்டானும்'' என்ற அர்த்தத்தில் தலைப்புகள் கொடுத்து இப்பத்திரிகைகள் எழுதின. அப்போது சிறினதாகக் காட்டிக்கொண்ட பேர்வழிகள் தான் இன்று அடித்துப் புரண்டு போய் அவர்கள் காலிலியே விழுந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் திடீரென 'விடுதலை' மீதுமட்டும் கோபம் பிறக்க என்ன காரணம்? இந்தக் கோபத்தைக் காட்டி, யார் தாக்கினார்களோ அவர்களின் பாதார சேவைக்கே தம்மை அர்ப்பணிப்பதாக பல்லிளித்து முன் போய் நிற்க என்ன காரணம்?

* *

'விடுதலை' விஷயம் புதிதல்ல. அப்பத்திரிகை ஜனன மெடுத்த நாளிலிருந்து இதுவரை அப்படித் தான் எழுதி வருகிறது. இதை ஒட்டி எத்தனை வகுப்புக்கலவரங்கள் மூண்டன? எத்தனை பேர் படுகொலையானார்கள்? எத்தனை இடங்களில் தீ வைத்தார்கள்? இக்கேள்விக்கு யாராவது பதில் சொல்ல முடியுமா? மகாத்மா கொலையை ஒட்டி வகுப்புத் தீ மூண்டு எங்கும் பரவியது. பல தலைகள் உருண்டன. அதுபோல இந்தப் பத்திரிகையின் எழுத்தாலோ, பிரசாரத்தாலோ எங்காவது கலவரம் மூண்டதா? யார் தலையாவது உருண்டதா? அப்பேர்ப்பட்ட அந்தக் கொலைக்குக் காரணமான ஆர். எஸ். எஸ். பத்திரிகைகள்கூட இன்னும் நடக்கின்றன. அந்தப் பத்திரிகைகளுக்குக்கூட 1,0000 ரூபாய் ஜாமீன் யாரும் கேட்கவில்லை. இதே சென்னை சர்க்கார்கூட 1000 ரூபாய்தான் ஒரு வாரப்பத்திரிகைக்குக் கேட்டிருக்கிறது. எனவே 'விடுதலை'யின் எழுத்தால் தமிழ் நாடு கலவரப் பிரளயத்தில் அமிழ்ந்து போகுமென நினைப்பதோ, அதை இந்த 1,0000 ரூபாய் அணை போட்டுத் தடுக்குமென கற்பனை செய்து கொள்ளுவதோ ஒரு சர்க்காரின் புத்திசாலித்தனத்தைக் காட்டுவதாகாது.

* *

தனிப்பட்டவர்கள் வேண்டுமானால் நல்ல பிள்ளைகள் என்று பெயர் எடுக்கவும், நமஸ்காரம் பெறவும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதுவும்கூட இந்த நல்ல பிள்ளைப் பேர் எவ்வளவு நாட்களுக்கு என்பது சிறு பிள்ளைக்குக்கூடத் தெரியும்? ஏனென்றால் காட்டானும் மாட்டானும் என்று எழுதிய கை, பக்தவத்சலத்தையோ அல்லது வேறு யாரையுமோ பிரித்து வைத்து எழுதவில்லை? அதே போல "கிழவனும் கழுதையும்'' என்று திட்டின கிழட்டுப் பத்திரிகை யாருக்கும் விதி விலக்குத்தரவில்லை. எனவே யாரைத் திருப்தி பண்ண வேண்டுமென்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் தான் கடைசியில் ஏமாந்த சோணகிரிகளாக நிற்பார்கள்!

* *

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

2—7—49 சனிக்கிழமை.

# ஜாமீன் ரூ. 3000!

"விடுதலை", "திராவிடநாடு" ஆகியவற்றிற்கு ஜாமீன் கேட்ட நம் 'சுயராஜ்ஜிய' சர்க்காரின் 'கிருபா கடாட்சம்' இப்போது நம்மீதும் பாய்ந்திருக்கிறது. இந்த 'கிருபைக்கு' நாம் 3000 ரூபாய் 'பரிசாக'க் கொடுக்கவேண்டுமாம். ஆம்! குடி அரசுக்கு ஜாமீன் ரூ. 3000ம் என்கிறது பத்திரிகைச் செய்தி.

இந்த ஜாமீன் நடவடிக்கையை யொட்டிய உத்திரவு எதவும் இன்னும் நம் கைக்குக்கிடைக்கவில்லை. எதற்காக—என்ன காரணத்தைச் சாக்காகக் கூறி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது, அந்த உத்திரவைப்பெற்ற பிறகுதான் நாம் ஆதாரபூர்வமாக தெரிந்துகொள்ளமுடியும்.

குடி அரசு ஆரம்பித்து சுமார் இந்த 25-வருஷங்களுக்குள் எத்தனையோ முறை, என்னென்னமோ காரணங்களுக்காக என்று, இந்த ஜாமீன் 'கிஸ்தி'களும், வழக்கு நடவடிக்கை 'தர்பார்'களும் நடந்திருக்கின்றன. சுருக்கமாகச் சொல்வதென்றால் குடி அரசின் ஆயுட் காலத்தில், 2-வருஷத்துக்கொரு நடவடிக்கை என்கின்ற வீதாச்சாரத்திலேயே நடந்து வந்திருக்கின்றன என்று கூறலாம். ஆனால் அத்தனையும் வெள்ளைக்கார அந்நியனான ஆங்கிலேயனுடைய ஆட்சியில். அதாவது இந்தியநாட்டில் இந்திய மக்களுக்குப் பேச்சுச்சுதந்தரமில்லை, எழுத்துச் சுதந்தரமில்லை, கருத்துச் சுதந்தரமில்லை என்பதான காரணங்களைச் சொல்லி, நாட்டு மக்களுடைய உத்வேகத்தைத் திரட்டி; அன்னியனாகிய வெள்ளைக்காரனுடைய ஆட்சியை ஒழித்துக் கட்டவேண்டுமென்று காங்கரஸ் தேசிய சபையினரால் முழக்கமிடப்பட்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தினால்.

அந்த ஏகாதிபத்தியத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட தொல்லை, தொந்தரவு, கஷ்டநஷ்டங்கள் ஆகியவைகளை எண்ணும்போது, இந்த மாகாணத்தில் வேறு எந்தத் தேசியப் பத்திரிகைகளுக்குக்கூட அந்த அளவு வெள்ளைக்காரசர்க்காரால் அந்தக் காலத்தில் கொடுக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

எதற்காக இதை நாம் கூறுகிறோமென்றால், குடி அரசுக்கு ஜாமீன்நடவடிக்கைகளோ, வழக்கு நடவடிக்கைகளோ புதியவை அல்ல. திமிர்படைத்த ஏகாதிபத்தியத்தின் முழு வேட்டைக்கும் வேறு எந்தத் தேசிய ஏடுகளும் ஆளாகாத அளவுக்கு ஆளாகி, ஆனால் இன்றுவரை உயிர் போகாமல் நின்று போராடிவரும் பெருமைபெற்றது குடி அரசு. ஏகாதிபத்தியத்தின் உருட்டலும், மிரட்டலும், பாய்ச்சலும், பிடுங்கலும் குடி அரசுக்கு நெடுநாளைய நித்திய அநுபவம். இந்தச் சலசலப்பு வகையில், குடி அரசு ஒரு பனங்காட்டு நரி என்பதை இன்றைய ஆளவந்தார்களுக்கு நினைப்பூட்டுவதற்காகவே.

மேலும் இப்போது கேட்கப்பட்டதாய்ச் சொல்லப்படும் 3000 ரூபாய் ஜாமீன் நடவடிக்கையைக் காணும்போது, நம்ம சுயராஜ்ஜிய சர்க்கார் முந்திய ஏகாதிபத்திய அந்நிய வெள்ளை அரசாங்கத்தையும் பலவகையில் தோற்கடித்து விட்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகவுமாம்.

குடி அரசின் மீது இப்போதைய பனியா-பார்ப்பன அடிமை சர்க்காரான சுயராஜ்ஜிய சர்க்கார், ஏதோ ஒரு சாக்கைக்கூறி, இந்த ஜாமீன் குத்தைக் குத்த இருக்கிறது என்கிற சேதியானது, நெடுநாளாகவே கேட்கப்பட்டும், சொல்லப் போனால் நம்மால் எதிர்பார்க்கப்பட்டும் வரும் சேதியே யாகும். ஏனென்றால் 7, 8 மாதங்களுக்கு முன்னாலிருந்தே இந்தப் பேச்சு நடந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். எப்படியும் பார்ப்பனர்கள் தயவில்தான் வாழ்ந்தாக வேண்டுமென்கிற முடிவுக்கு வந்துவிட்ட ஒரு சர்க்காரிடமிருந்து, வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும்?

இந்த நடவடிக்கைக்குக் காரணங்களாகச் சர்க்கார் எதைக் கூறுவதாயிருந்தாலும், அந்தக் காரணங்களுள் ஒன்றுகூட, அறிவுக்கோ நியாயத்துக்கோ கட்டுப்பட்டதாக—நம்மீது குற்றமென்று சுமத்தக்கூடியதாக ஒன்றுகூட இருக்க முடியாது என்பதை இன்றைக்கே நாம் வற்புறுத்திக்கூற முடியும். இன்னும் கூறுவதாயிருந்தால், குடி அரசின் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் எதுவாயிருந்தாலும், அவைகள் எல்லாம் இந்தத் துணைக்கண்டத்திலேயே, வெவ்வேறு மாகாணங்களில் குற்றமற்றவை என்பதாகக் கோர்ட்டார் தீர்ப்புக்கூறியவைகளாகவும், எந்த நடுநிலைமையுடைய ஜனநாயகவாதியும் குற்றம் என்று குறிப்பிட முடியாதவைகளாகவும்தான் இருக்க முடியும்.

இப்படி அர்த்தமற்ற காரணங்களைச் சாக்காகக் கூறிக்கொண்டுதான், நம்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையானால், இந்த 'சுயராஜ்ஜிய' சர்க்காரின் நடவடிக்கைக்கு நாம் மிகமிக வெட்கப்படுகிறோம்.

இந்த நடவடிக்கையில், எவ்வளவு கோழைத்தனமும் குறுகிய புத்தியும் நிறைந்திருக்கிறது என்பதை உணரும்போது எவர்தான் வெட்கப்படாமல் இருக்க முடியும் என்றும் கேட்கிறோம்.

பார்ப்பனீயமே! வெற்றி மேல் வெற்றி உனக்கு. உனக்குப் பராக்குக் கூறுவதுதான் எங்களுடைய கடமை என்று இந்த சர்க்கார் துணிந்த பிறகு, உன்னுடைய பூரிப்புக்குக் கேட்கவாவேண்டும்? வெற்றிச் சங்கு ஊதுகிறாய்! ஊது! ஊது!! உன் வெறி தீருமட்டும் ஊது! உன் வயிறு வீங்கிவெடிக்குமட்டும் பலமாக ஊது!!

தேசிய பார்ப்பனப் பத்திரிகைப் பாப்பிருமங்களே! உங்கள் எண்ணம் நிறைவேறிற்று, உங்கள் தர்ப்பே

நா முத்தையா

# ஈ. வெ. ரா. அறிக்கை!

★

### எனது 'விளக்கம்' என்ற தலைப்பில் ''விடுதலை''யில் 19...6...49-ம் தேதியில் நான் எழுதிய தலையங்க அறிக்கையை அனுசரித்து அடுத்த தொடர்ச்சி

## அறிக்கை

★

### (இதை மக்கள் ஊன்றிப் படிக்கவேண்டும்)

தோழர்களே!

கட்டாய இந்தி எதிர்ப்பு நடவடிக்கையில் நான் தீவிரமாய் ஈடுபடப்போவதால் ஏற்படக்கூடிய விளைவு,

உடுமலைப்பேட்டையில் நான் 144 தடையுத்திரவை மீறியதற்காக என்று சர்க்கார் நடத்தப்போவதாகத் தெரியவரும் காரியத்தின் விளைவு,

சென்னையில் 2 மாதத்துக்கு முன் நான் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சின் பேரில் சர்க்கார் ஏதோ நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாய்த் தெரிய வருவதால் அதனால் ஏற்படும் விளைவு,

ஆகிய மூன்று விளைவுகளுக்கும் நான் ஆளாகத் தயாராய் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆதலால், அதற்குள் நான் இதற்கு முந்திய அறிக்கையில் தெரிவித்தபடி இயக்க நடப்புக்கு, இயக்கப் பொருள்களுக்கு நான் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியவனாக இருக்கிறேன்.

என்மீது ஏற்படும் வழக்குகளுக்கு எதிர்வாதம் செய்வதில் நான் நம்பிக்கை இல்லாதவனாக இருப்பதால், சர்க்கார் கேஸ் தொடர்ந்தால் நான் தண்டனை அடைய வேண்டியது என்பது தவிர, வேறு முடிவு எதிர்பார்ப்பதற்கு இல்லை. மற்றும் எனக்கு என்னைத் தலைவனென்று சொல்லிக்கொண்டும், என்னைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டும் என்னைச் சுற்றி இருக்கும் தோழர்கள் சிலரிடம் நான் எவ்வளவு சகிப்புத் தன்மை, அவர்களது தவறை மறக்கும் தன்மை, அனுசரிப்புத் தன்மை முதலியவைகளைக் காட்டினாலும் அவைகளை அவர்கள் எனது பலவீனம், ஏமாந்ததனம் என்று கருதிக் கொண்டு இயக்கத்தினுடையவும், என் முயற்சியினுடையவும் பின் விளைவைப்பற்றி நான் பயப்படும் வண்ணமாய்ப், பெரிதும் அவநம்பிக்கை கொள்ளும்வண்ணமுமாக அவர்கள் நடந்து வருவதாக உணர்கிறேன்.

மற்றும் நான் நாணயஸ்தர்கள் என்றும், இயக்கத்தினிடமும் என்னிடமும் உண்மையான பற்றுஉள்ளவர்கள் என்றும் நம்பின தோழர்கள் பலர் ஆயிரக்கணக்கில் ரூபாய்களை மோசம் செய்துவிட்டதைக் கண்டும் கண்டு பிடித்தும் வருகிறேன். சிலர் இன்னமும் என்னை மோசம் செய்து வருவதாக ஐயம்கொண்டும் உறுதி கொண்டும் வருகிறேன்.

இந்த நிலையில் என்னைப்பற்றியும், இயக்கத்தைப்பற்றியும், இயக்க நடப்பைப்பற்றியும், எனக்குப் பின்னும் ஒரு அளவுக்காவது இயக்கம் நடைபெற வேண்டும் என்பதுபற்றியும், ஏதாவது ஒரு வழி செய்யவேண்டியதைப் பற்றியும் மிகக் கவலையுடனும் பற்றுடனும்சிந்தித்து நடக்கவேண்டியவனாக இருக்கிறேன். இந்த சிந்தனை கடந்த 4, 5 மாதங்களாகவே என்னை வாட்டி வருவதுடன், என் உடல் நிலைக்கும் காரணமாக இருந்து வருகிறது.

இதற்காக என் அனுபவத்தைக் கொண்டு எனக்குத் தோன்றியதை நான் செய்து முடிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். சற்றேறக்குறைய ஒரு முடிவுக்கும் வந்து விட்டேன். அக்காரியங்கள் எனது தோழர்களுக்கும் என்னிடம் அன்பும் எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும் சற்று புரட்சியாகவும் திடுக்கிடக் கூடியதாகவும், இயக்கமே அழிந்துவிடுமோ என்று பயப்படக் கூடியதாகவும், எனக்கும் ஒருகெட்டபேரும் இழிவும் ஏற்படக்கூடிய பெரிய தவறாகவும்கூட காணப்படுவதாகத் தெரிகிறது. பொதுமக்களுக்கும் அப்படியே காணப்படலாம்.

எனக்கு வயது 71-க்கு மேலாகிறது. நான் பொது வாழ்வில் 40—50 வருஷகால அனுபவமுடையவன். பொது ஜனங்களையும், சிறப்பாகப் பாமர மக்களை

---

தனை நூற்றுக்கு நூறும் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. உங்கள் பாத மலருக்கு 'சரணம் கச்சாமி' என்று பிரார்த்தித்துவிட்டது இன்றைய சர்க்கார். எதிரியில்லாத இடங்களில்,— எதிரிகளின் கைகள் கட்டிப் போடப்பட்ட பிறகு உங்களின் 'வீரமிக்க' பேனாக்கள் வெற்றி முரசு கொட்டட்டும்! உங்கள் தலையணை மந்திரத்துக்கு ஜே! ஜே!!

ஆனால் பார்ப்பனீயத்தின் வலையில் வீழ்ந்து, நாம் இன்னதுதான் செய்கிறோம் என்பதை அறியாமலே, ஒன்றின்மேல் ஒன்றாக புசுபுசுத்த அம்புகளைப் பாய்ச்சும் சுயராஜ்ஜிய சர்க்காரே! உங்களுக்குச் சிந்தித்துப் பார்க்கும்போக்குச் சிறிதாவது உண்டா? விடுதலைக்கு ரூ. 10000ம் என்றீர்கள்! திராவிட நாட்டுக்கு ரூ. 3000 என்றீர்கள்! இதற்கு இந்நாட்டு மக்கள் அளிக்கும் பதில் என்ன? இரண்டணாவும் நாலணாவுமாக எத்தனை ஆயிரம் பாட்டாளி மக்கள் வீசி வீசி எறிந்து, உங்கள் உத்திரவை எவ்வளவு கேவலமாகத் துளைத்து விட்டிருக்கிறார்கள் என்பதை ஏன் நீங்கள் சிந்திக்கக்கூடாது? 5, 6 அக்கிரஹார வாசிகளைத் திருப்திப்படுத்த—காண்டீபம் சொல்வதுபோல்இரண்டொருமந்திரிகள் 'நமஸ்தே' வாங்க, நடக்கும் இந்த ஜாமீன் கூத்தைக்கண்டு எத்தனை ஆயிரம் ஏழைகள் வயிறெரிந்து 'வாழ்த்து' கிறார்கள் என்பதை ஏன் நீங்கள் எண்ணிப்பார்க்கவில்லை? அழிவுக்காலத்தில் அறிவுக்கோ, சிந்தனைக்கோ வேலையில்லை என்பீர்களானால் சிந்தனையைக் கெட்டியாய்- பலமாய்— பத்திரமாய் மூடி வையுங்கள். இதுதான் நாம் உங்களுக்குக் கூறும் புத்திமதி!

யும் ஒரு அளவுக்கு உணர்ந்தவன். அவர்களது மனப்பான்மையையும் (Masspsychology) தெரிந்தவன். நான் நடப்பு முறையில் சுலபமாக யாருக்கும் இணங்கி விடக்கூடிய அளவு வழவழப்பானவன் என்றாலும் கொள்கை, லட்சிய முறையில்உறுதியானவன். என்னிடம் உள்ள இயற்கைகுணம் என் நண்பர்களுக்கும், கூட்டு வேலைக்காரர்களுக்கும் எவ்வளவு பொருத்தமற்றதாக இருந்தாலும், குற்றமானதாகக் காணப்பட்டாலும், இந்த 30 ஆண்டில் என் கூட்டுவேலைக்காரர் பலர் விலகினாலும் அவர்கள் அதிருப்தியையும், எதிர்ப்பையும் கடந்து அந்த என் இயற்கைக் குணத்தாலேயே மற்றவர் என்ன நினைப்பார்களோ என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் நடந்து வந்ததாலேயே, யார் இயக்கத்தை விட்டுப் போனாலும் சரி, எனக்கு எதிரியானாலும் சரி என்று உறுதியாய் நடந்ததாலேயே, பொது ஜனங்களுடைய நம்பிக்கைக்குச் சிறிதாவது ஆளானவனாக இருந்து இயக்கத்தை நடத்தி வந்திருக்கிறேன். எனது காரியம், கொள்கை, திட்டம் எதுவானாலும் அவைபற்றிய என் அனுபவத்தில் துவக்கத்தில் நான் வெளியிடும் போது பொதுவாகவே மக்களுக்கு எவ்வளவு கஷ்டமாக, கேடானதாகக் காணப்பட்டாலும் அதை விடாப்பிடியாய் நடத்திக்கொண்டு வந்து, ஆட்சேபித்த மக்களைப் பெரிதும் ஆமோதிக்கச் செய்தே வந்திருக்கிறேனே தவிர, தவறு செய்ததாகக் கருதி விட்டுவிடவோ, திருத்திக்கொள்ளவோ, துக்கப்படவோ எனக்கு வாய்ப்பே ஏற்பட்டதில்லை. அநேக தடவை எனது மானாவமானத்தைப்பற்றிக்கூடக் கவலைப்படாமலும் நடந்து வந்திருக்கிறேன்.

பொதுவாகச் சொல்லவேண்டுமானால் எனது பொதுநலவாழ்வு என்பது பொது மக்களுக்காக என்று கருதி வாழ்ந்து வந்திருந்தாலும்கூட, அவைகளை என் சொந்த வாழ்வுக்காகச் செய்யப்படும் என் சொந்தக்காரியம், என் சொந்தச் சொத்து என்பதாகக் கருதியே சுயேச்சையாய், சொந்த உரிமையாய் நடந்தும் நடத்தியும் வந்திருக்கிறேன்.

ஆகவே அப்படிப்பட்ட உரிமையையும் சொந்தப் பொறுப்பையும் ஆதாரமாய்க் கொண்டே எனது லட்சியத்தின் நன்மை, இயக்கத்தின் நன்மை என்பதைக் கருதி மேல்காட்டிய அவசர நிலையில் இயக்கத்தக்கு ஆக சில ஏற்பாடுகள் செய்ய முன்வந்து விட்டேன். அதைச் செய்ய வேண்டியது எனது அறிவான, யோக்கியமான கடமை என்று உண்மையாகக் கருதிவிட்டேன். இதைப் பற்றிய முழு விவரமும் தெரியாதவர்களும், நடு நிலையில் அரைகுறையாய் அறிய நேர்ந்தவர்களும் என் செயலைத் தவறாகக் கருதலாம்; ஆத்திரப்படலாம்; எதிரிகள் இதைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக்கொண்டு "பெரியதொரு கேடு ஏற்பட்டதாக" 'தடிதடி'க்கலாம். என் பொறுப்பு எனக்குப் பெரிது. அது எனக்குத் தெரியும். பொதுமக்களுக்கு ஆக என்று நான் எடுத்துக்கொண்ட காரியம், அவர்கள் என்னை நம்பி நடந்துகொண்ட தன்மை, ஆகியவைகளும் என் ஆயுள்வரையும், கூடுமான அளவு ஆயுளுக்குப் பின்னும் ஒழுங்கானபடி நடக்கும்படியாகப் பார்த்து என் புத்திக்கு எட்டினவரை அறிவுடைமையோடு நடந்துகொள்ளவேண்டியதுஎனது கடமையாகும்.

என் வார்த்தையை நடத்தையை நம்பாமல் ஒப்புக்கொள்ளாமல் எனது காரியத்தைக்குறை எண்ணுபவர்களுக்கு சமாதானம் சொல்லவோ, அவர்களுக்குத் திருப்தி ஏற்படும்படி நடக்கவோ இந்த அவசர சமயத்தில் நான் கவலை எடுத்துக் கொள்ளுவதும் கருதுவதும் வீண் வேலை என்று கருதித் தீர வேண்டியவனாக இருப்பதால் அந்த வேலையை இப்போது நான் மேற்கொள்ளவில்லை.

எனவே சுமார் 4, 5 மாதங்களாகவே பொதுக் கூட்டங்களில் எனது பேச்சிலும் எழுத்திலும் தெரிவித்து வந்திருக்கிறபடியும், "கோவை மாநாட்டில் எனக்கு வார்சு ஏற்படுவதுபற்றித்தான் கவர்னர் ஜனரலிடம் பேசினேன்" என்று வெளியிட்டபடியும், அதில் மக்களுக்கு உறுதி கூறினபடியும், சமீபத்தில் 19-ந் தேதி "விளக்கம்" என்னும் தலைப்பில் விடுதலையில் குறிப்புக் காட்டி வந்திருக்கிறபடியும் முதலில் எனக்கும் எனது பொருளுக்கும் சட்டப்படிக்கான வார்சாக ஒருவரை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமும் அவசரமுமாகையால் நான் 5, 6 வருஷ காலமாகப் பழகி நம்பிக்கை கொண்டதும் என் நலத்திலும் இயக்க நலத்திலும் உண்மையான பற்றும் கவலையும் கொண்டு நடந்துவந்திருக்கிறதுமான மணியம்மையை எப்படியாவது வார்சுரிமையாக ஆக்கிக் கொண்டு, அந்த உரிமையையும் தனிப்பட்ட தன்மையையும் சேர்த்து மற்றும் சுமார் 4, 5 பேர்களையும் சேர்த்து இயக்க நடப்புக்கும் பொருள் பாதுகாப்புக்குமாக ஒரு டிரஸ்டு பத்திரம்எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். அப்பத்திரமும்எழுதப்பட்டுவருகிறது. இதில் சட்டப்படி செல்லுபடி ஆவதற்காக என்று நமது இஷ்டத்துக்கு விரோதமாகச் சில சொற்கள் பயன்படுத்த நேரிட்டால், அதனால் கொள்கையே போய்விட்டதென்றோ, போய்விடுமோ என்றோ பயப்படுவது உறுதியற்ற தன்மையேயாகும்.

துவக்கத்தில் மேலே காட்டியதான, கட்டாய இந்தியை எதிர்ப்பதால் ஏற்படும் தொல்லை, சட்டம் மீறிய சொற்பொழிவாற்றியதன் பலனாய் என்றும், மற்றும் இயக்கத்தை அடக்குவதற்கென்றும், சர்க்காரால் திட்டமிடப்பட்டுக்கொண்டிருக்கும் தொல்லை ஆகியவைகள் வெளிவந்து என் எண்ணம் நிறைவேறச் செய்ய முடியாமல் தடையாகிவிடும்படி நேருவதற்குமுன், இந்தக் காரியத்தைத் துரிதமாகச்செய்யவேண்டியவனாக இருக்கிறபடியால் அதைச் செய்யத் துவக்கிவிட்டேன்; இது விஷயத்தில் மற்றவர்கள், பொது ஜனங்கள் என்ன நினைப்பார்கள், எதிரிகள் என்னசொல்லுவார்கள் என்பதைப்பற்றி எல்லாம் சிந்திக்க ஆரம்பித்தேனேயானால், இயக்கப் பாதுகாப்புக் காரியம் அடியோடு கெட்டுவிடும். இயக்கப் பொருள், இயக்கத்துக்காக நான் சேர்த்த பொருள், இயக்கத்துக்காக என்னை நம்பி பலர் அளித்தபொருள், இயக்கத்துக்காக நான் உதவ வேண்டும் என்று கருதி இருக்கிற பொருள் ஆகியவைகள் நாதியற்று இயக்கத்துக்குப் பயன்படாததாக இயக்கமும் பொருளும் தலைவிரிகோலமாகி ஆகிவிடுவதோடு உலகோர் என்னைப் பழிகூறவும் ஏற்

ராஜா முத்தையா

பட்டுவிடும்.

ஆதலால் எனது கடமையை உத்தேசித்து, என் மனசாட்சிமீது நம்பிக்கை வைத்து நான் மிகுந்த யோசனைமீது நல்ல எண்ணத்துடன் இந்தக்காரியம் செய்கிறேன்.

கூடிய விரைவில் மக்கள் எனது நல்லெண்ணத்தையும் இதன் நற்பலனையும் உணருவார்கள் என்கின்ற உறுதி எனக்கு உண்டு.

குறிப்பு:— இதை ஏன் இப்போது தெரிவிக்கிறேன் என்றால், இந்த ஏற்பாடு இயக்கத் தோழர்கள் என்பவர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை யென்று எனக்குத் தெரியவருவதாலும், எந்தக் காரியமும் முடிந்தபின்தான் உருவாகக்கூடுமானதாலும், ஏதாவது காரணத்தால் இது நடைபெறாமல் போகுமானால், வேறுவிதமாய் எனக்கு ஏதாவது முடிவு ஏற்படுமானால் (நடை முடிவு எந்த நிமிஷமும் எதிர்பார்க்கக் கூடியதுதானே) பொதுமக்களுக்கு என் உள்ளம் தெரிவதற்காக வேண்டியே இப்போது தெரிவிக்கிறேன். மக்கள் சுபாவம் எனக்குத் தெரியும்.

மக்களின் பொதுநல உணர்ச்சி என்பது எப்படிப்பட்டது என்பதும், அவர்களின் சராசரி நாணயம் தன்னல மறுப்பு எவ்வளவு என்பதும், எவ்வளவு பேர் பொதுநலத்துக்காக மாத்திரம் வாழ்பவர்கள் எவ்வளவு தூரம் நடப்பவர்கள் என்பதும் எனக்குத் தெரியும் என்பதை எனது நண்பர்கள் உணர வேண்டுகிறேன்.

—ஈ. வெ. ரா.

# தமிழனின் இதய கீதம்!

★

"இதோ பார், நீ செல்லவேண்டிய பாதை. உன்னைப் புத்தம் புது வாழ்வு எனும் இன்ப புரிக்கு அழைத்துச் செல்லும் மார்க்கம். வறுமையும் வாட்டமும் தொலைந்து, சுரண்டலும் சுரண்டப்படுவதும் அழிந்து; ஏய்த்தலும் ஏய்க்கப்படுவதும் மறைந்து; அய்தீகங்களையும், புரோகிதத்துவ சுரங்கங்களையும் ஒழித்து அனைவர் உள்ளத்திலும் அன்பும், அமைதியும், பூர்ண திருப்தியும் அலைமோதுகின்ற நிலை படைத்த பொதுவுடைமை சமவெளிக்கு வா, வாவென உன்னைக் கூவி அன்புடன் அழைக்கும் சுடர் ஒளி!

கூவி அழைத்ததோடு நிற்கவில்லை. திராவிட இளைஞன் பயணம் துவங்கியதும் கூடவே தொடர்ந்து, கல்லும் முள்ளும் நிறைந்த பாதையிலே ஒதுங்கி அழைத்துச் சென்றது. இருட் படலங்கள் வழிமறைத்து நின்ற வேளையிலே, புரட்சி எனும் ஒளி விளக்கை ஏற்றிக் காட்டியவண்ணம் வந்தது. இளைஞன் சோர்வோ, சோகமோ காட்டிய வேளையில் அந்த ஏக்க உணர்ச்சியைப் போக்கி ஊக்கத்தையும், உற்சாகத்தையும் காட்டிய வண்ணம் வந்தது. இளைஞனுக்கோ மூட நம்பிக்கை மறைந்து அறிவுத்தெளிவுபிறந்தது. பழமைப் பித்து தொலைந்து புரட்சியில் ஆர்வம் பிறந்தது. புனர் ஜன்மக் கற்பனை ஒழிந்து சாவு இயற்கை என்றறிந்தான். நமஸ்காரம் நலிந்து வணக்கம் வலிமை கொண்டது. அவள் இளம் வயதில் விதவையானாள்—அது அவளின் விதி என்று கூறும் சதி தொலைந்து, மாதர்க்கும் மறுமணம் என்ற கொள்கையை உணர்ந்தான். எல்லோரும் ஓர் இனம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற முதுமொழியை உணர்த்தப்பட்டான்.

இறுதியில் திராவிடர் கழகத்தைப் போர்வாளாகவும், தன் மான இயக்கத்தைத் தன் கேடயமாகவும் கொண்டு புறப்பட்டான் போர் வீரனாக. அவனுக்கு உதவியாக நின்றது சுடர் ஒளி. ஓர் விடுதலை.

சின்னஞ் சிறியதோர் தினசரி ஏடுதான் விடுதலை. ஆனால் அது செய்துவரும் பணியோ, எத்தகைய பெரிய பெரிய எதிரிகளும் கண்டு அஞ்சக்கூடியது. ஆரியம் என்னும் மாயாவியை மண்டியிட்டுக் கெஞ்சும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டிருக்கிறது. மறைவில் சதி செய்து கொண்டிருக்கும் ஆரியத்திற்குச் சவப்பெட்டி தயார் செய்திருக்கிறது.

விடுதலை ஒத்தை ஆளாக, களத்தில் நின்று போராடிய காலத்திலே அது அணுவளவும் அஞ்சவில்லை. எனில் பல வடிவங்களில் உள்ள குட்டி விடுதலைகள் ஏராளமாக உள்ள இக் காலத்திலா அது அஞ்சப்போகிறது. விடுதலை ஒன்று 1939ல்! விடுதலைகள் பல 1949ல்!

'விடுதலை' என்ற சொல் கேட்டாலே தமிழர் நெஞ்சில் எலாம் வீரமும் இன்பமும் திகழ்கின்றன. விடுதலையா......? அது எம்மவர்களுக்கெல்லாம் உணர்ச்சி தந்து எங்கள் தன்மானத்திற்கு வற்றாது ஊறும்ஊற்று என்று களித்துகுதித்துக்கூத்தாடுகின்றனர் தமிழர். தமிழனின் இதயம்...ஆம் தமிழகத்திற்கே இதயம் போன்றதுதான் விடுதலை. விடுதலை என்றாலே பூரிப்பும் பெருமிதமும் கொள்கின்றனர் தன்மானத் தமிழர்கள். அதில் விளம்பரங்கள் கிடையாது. விதவிதமான அலங்கார அச்சு அமைப்புகளுடன் "ஞாயிறு மலர்" கிடையாது. கலர் படங்களும், சித்திரங்களும் (கார்டூன்) கிடையாது. தேய்ந்து போன எழுத்துக்களுடன் நான்கே பக்கங்கள்தான். ஒரு நாள் விடுதலையைப் பார்க்காவிடில் ஏதோ பறிகொடுத்தவன்போல நிற்கிறான் தமிழன்.

இதை அறியவில்லை ஆளவந்தார்கள். எப்படி அறிவார்கள்? அவர்கள்தான் ஆளவந்தார்களாயிற்றே. சிந்திக்கத்தான் நேரமேது? போட்ட கோட்டிற்கு மீறி நடக்க முடியாத நிலையிலிருக்கிறார்களே! மீறினாலும் பார்ப்பனப் பத்திரிகையின் பயமுறுத்தல்கள். ஆம், அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித்தான்...அல்ல அவர்களின் கட்டளையை நிறைவேற்றவே, தம் இனத் தமிழர்களை அடக்கி ஒழிக்கப்பார்த்தனர். கொட்டை எழுத்துக்களால் தீட்டப்பட்ட அடக்கு முறைப் பாணத்தால்.

ஆட்சியாளர் அன்பாக அளித்த பரிசு:

"'விடுதலை' தினசரிக்கு, முன் கொடுத்த ஜாமீன் இரண்டாயிரம் பறிமுதல் செய்யப்பட்டு மீண்டும் பத்தாயிரம் ஜாமீன் கட்டவேண்டும். கட்டத் தவறினால் பத்திரிகை நிறுத்தப்படும்" தமிழனின் உள்ளம் பதறியது. இரத்த ஓட்டம் அதிகரித்தது. புரட்சிக்கு மெருகு தீட்டுகின்றனர் ஆட்சியாளர் என்று

பொறி பரக்கப் பேசினர். இரண்டாயிரம்......ஆம் இரண்டு ஆயிர, ஒரு ரூபாய்கள், கேள்வி கேட்பாரற்று, சுயேச்சையாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

பெரிய ஜமீன்தார்களாலும், மிராஸ்தார்களாலும், பிளாக்மார்க் கட்டில் சம்பாதித்த வியாபாரிகளாலும், ஆயிரம் அய்நூறு என்று சேர்த்துக் கொடுக்கப்பட்ட ஜாமீன் தொகை அல்ல இரண்டாயிரம். "அன்றாடங்காச்சி"களினால், அரையணா ஓரணாவாகக் கொடுக்கப்பட்ட தொகை. சேர்ந்த ஒவ்வொரு அணாவும் தமிழனின் உள்ளம். அவனின் ஓயா உழைப்பின் உருவம். அவன் சிந்திய இரத்தம்—கொட்டிய வியர்வை—இவையின் கூட்டுத் தொகைதான் பறிமுதல் செய்யப்பட்டது. ஒரு பணக்காரனால் கொடுக்கப்படலாம் இரண்டாயிரம். ஆனால் நம் கட்சியோ, தொழிலாள தன்மான கட்சி. அவர்கள் தங்கள் இரத்தத்தையே வடித்தெடுத்துத் தந்திருக்கிறார்கள். ரூபாய், அணா, பைசாக்களாக, தங்கள் இதய ஒளி விடுதலையைக் காப்பாற்ற.

பறிமுதலுடன் நிற்கவில்லை, மீண்டும் பத்தாயிரம். அய்யோ நினைக்கும்போதே பயமாகயிருக்கிறது. எங்களின் விடுதலையை, தமிழகத்தின் முரசொலியை, பாட்டாளியின் தினசரியை அழிக்கவே இந்த ஏற்பாடு ஏவிவிடப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் ஆட்சிபீடத்தை அலங்கரிக்கவந்த ஆட்சியாளரே! நீர் கேட்ட ஜாமீன் தொகையை ஒருவாறாகக்கொடுத்துவிட்டோம். பார்ப்பன பயங்கர மிரட்டலுக்கு அஞ்சாமல் சற்று செவி சாயுங்கள்.

எங்களின் தினசரி விடுதலையை அழித்துவிடலாமென்று எண்ணாதீர்கள். அதை அழிக்க உம்மால் ஆகாது. முயற்சியும் எடுக்கவேண்டாம். ஒரு பெயரில் ஒரு ஊரில் அழித்து விட்டாலும், மற்றோர் ஊரில் மற்றோர் பெயரில் பிறக்கும் என்பது திண்ணம். திராவிடம் மறையும்வரை திராவிடத்தின் இதயம் மறையாதென்பதைநினைவூட்டுகிறோம். ஆங்கிலேய அரசாட்சி ஏறக்குறைய இரண்டு நூறு ஆண்டுகள் நடந்தவரையில், இவ்விதமான அனாகரீகமான அடக்குமுறை வீசப்படவில்லை— பத்திரிகைகள் மீதும் காட்டப்படவில்லை. தமிழகத்திலே தமிழரின் தினசரிக்கு ஜாமீன் கட்டினர் என்று பிற நாட்டினர் பார்த்துக் கேலி செய்வார்களே என்றுதான் வருத்தப்படுகிறோம். அரசாட்சிக் குழுவினர்களே! திராவிட இனத்தோழர்களே! நீங்கள் ஆரியத்தின் சூழ்ச்சிக்குக் கட்டுப்பட்டு பரிதாப நிலையிலிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் வருங்கால திராவிடம் உங்களை, சபிக்கும். இனத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் என்று பழி சுமத்தும். இன்றே மாற்றுத் தேடிக்கொள்ளுங்கள்; அதற்குப் போதிய மருந்தும் இருக்கிறது.

என்று மனதில் நினைத்து ஒவ்வொரு திராவிடனும், தமிழகத்தின் இதய ஒளி அணைக்கப்படாமல் தன் சக்திக்கேற்றவாறு ஆளவந்தவர்களின் முன்னிலையில் நாணயங்களை உருட்டிவிட்டு தலைநிமிர்ந்து நிற்பீர்களாக! ஓசையுடன் உருண்டோடும் ஒவ்வொரு நாணயமும், ஆளவந்தார்களின் நெஞ்சில் ஒரு விதக் கிளர்ச்சியை உண்டுபண்ணுமாக!

—ஆதவன்

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த உத்திரவுக்கு யார் காரணமோ அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

1. 'விடுதலை' வகுப்புத் துவேஷத்தைக் கிளப்புவது போல, வேறு பத்திரிகைகள் கிளப்புகின்றனவா இல்லையா? அப்படியானால் அப்பத்திரிகைகள் மீது சர்க்கார் எடுக்கும் நடவடிக்கை என்ன?

2. ஒரு பத்திரிகை வகுப்புத்துவேஷத்தைக் கிளப்புவதாக சர்க்கார் கூறுகிறது. இதை சர்க்கார் தீர்க்கமாக ஆராய்ந்து தான் கூறுகிறார்களா அல்லது தன்னிச்சையாகக் கூறுகிறார்களா? தன்னிச்சையாக இல்லையென்றால், வேறு யாருடைய ஆலோசனையைக் கேட்டார்கள்? அந்த ஆலோசனைக் காரர்களுக்கும் பிரஸ்தாப பத்திகைக்கும் தகராறு எதுவுமில்லையா? நடுநிலையிலிருந்து தான் அவர்கள் ஆலோசனை கூறினார்களா?

3. சர்க்கார் கருத்துக்கு ஒரு பத்திரிகை மாறுபட்டதென்றால், சர்க்கார் கோர்ட்டுக்கு போவது தானே நியாயம்? அப்படித்தானே பிற மாகாணங்களில் நடந்திருக்கிறது. "பிளிட்ஸ்—மார்ச்" என்னும் பத்திரிகைகள் விஷயங்களில் பம்பாய் சர்க்கார் அப்படித்தானே நடந்தார்கள்? இம்முறையை சென்னை சர்க்காரும் ஏன் அனுஷ்டிக்கக்கூடாது? குற்றச்சாட்டு சரியானதாக இருந்தால் கோர்ட்டுக்கு போகலாமல்லவா?

4. சர்க்காரின் இந்த ரூ. 10,000 ஜாமீன் உத்திரவு தமிழ் நாட்டுச் சரித்திரத்துக்கே புதுமையானது. மேலும் ஓர வஞ்சகமாக விதிக்கப்பட்டது. சிலர்க்கூச்சலுக்காகக் கிளம்பியதாகும். இதை சர்க்கார் மறுக்க முடியுமா?

5. இந்த உத்திரவைப்போட்ட மந்திரி பக்தவத்சலம் பற்றி பிரஸ்தாப பத்திரிகை,சில செய்திகளை வெளியிட்டதாகவும் அதைக் கண்டுதான் கோபமடைந்து அவர் இந்தத் தொகை கேட்டதாகவும் கூறப்படுகிறதே இது உண்மையா பொய்யா? மந்திரி பக்தவத்சலம் சிலரைத் திருப்திப் படுத்துவதற்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை தம் இலாகாவில் அனுஷ்டிப்பதில்லை என்பதுதான் "விடுதலை' சாட்டிய குற்றச்சாட்டா? இதுதான் இந்தஉத்திரவுக்குக் காரணமா?

6. இப்பத்திரிகையையே மூடிவிட ஸ்ரீ. ரெட்டியார் மந்திரிசபை காலத்திலேயே முயன்றதாகவும் அதை ஸ்ரீ. ரெட்டியார் தடுத்து இப்படி செய்வது தவறு என்றும்,பத்திரிகை ஆலோசனைக் கமிட்டிக்கு விஷயத்தை அனுப்பும் படியும் கூறியது உண்மையா பொய்யா? அதனால்தான் ஸ்ரீ. ரெட்டியார் போன பிறகு இவ்வுத்திரவு வந்ததா?

24—6—49.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு சிங்களச்சிறுவன் ரொட்டித் தட்டைக் கையில் ஏந்தி பரதேசியைக் கடந்துசென்றான். போகும் போக்கில் அவனுக்கு ஒரு உதை கொடுத்துவிட்டுச் சென்றான்.

"என்னதம்பி ஒழுங்கா நடக்க முடியலையா, உதைச்சிட்டு போறீயே''

நம் ஊர் வழக்கத்தில் தவறிப் போய் இப்படி கேட்டுவிட்டான்! சிறுவன் பரதேசியைச் சிலநிமிஷம் முறைத்துப் பார்த்தான். அவன் கண்களில் வெறுப்புக் குமுறிக் கொண்டு இருந்தது. பிறகு பக்கத்தில் வந்து நின்று,

"என்ன ஓய் நீ சொன்னது, இது இண்டியா இல்லே! சிலோன்! பத்திரம்!'' என்று தன் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு கூறினான். பரதேசி அப்படியே அயர்ந்து விட்டான். அப்பெட்டியிலிருந்த மற்ற யாவரும் வாயைத் திறக்கவேயில்லை. எப்படி முடியும்? அது என்ன நம் சொந்த நாடா?

* *

பல துன்பங்களையும் அவமானங்களையும் சகித்துக்கொண்டு குறிப்பிட்ட தோட்டத்தை அடைந்துவிட்டார்கள். முன் அனுபவித்திராத காற்றும், மழையும், குளிரும் பரதேசியின் மனைவியின் உயிரைப் பறித்துக்கொண்டு போய்விட்டது. அவர்கள் வெந்த உள்ளத்தினராயினர். அவர்களுக்குத் தேயிலை பறிப்பதுதான் வேலை.

ஒரோர் சமயம் மக்களின் அழகே அவர்களுக்குத் தீமை பயப்பதுண்டு. இப்பொழுது அலமேலுவின் அழகு அத்தோட்டத்திலிருந்த சில பேர்வழிகளின், குறிப்பாகக் கங்காணிமார்களின் கண்களை உறுத்த ஆரம்பித்தது.

ஒருநாள் தனிமையாக சிந்தனையில் ஆழ்ந்தவளாய் அலமேலு தேயிலை பறித்துக்கொண்டிருந்தாள்.

'அரும்பு எடுக்காதே பிள்ளே, கொழுந்தாப் பாத்துப் பறி''

குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் அக்குமரி. கண்களில் காமவெறி நர்த்தனமாட கங்காணியொருவன் நின்றுகொண்டிருந்ததைக் கவனித்தாள். ஒன்றும் பேசாமல் வேலையில் ஆழ்ந்தாள். அவன் இன்னும் அருகில் நெருங்கி 'அப்படி இல்லேப்பிள்ளே இந்தா இப்படிப் பறி' என்று கூறியவாறே பின்னால் இருந்தபடி அவளது இரு கரங்களையும் பற்றி தேயிலையில் வைத்தான். ஆனால் அவள் சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்றையும் செய்தான்.

அவள் கரங்களைப் பற்றியவாறே அவள் உடலைத் தன்னை நோக்கித் திருப்பி மார்புற இறுக அணைத்து, அவளது மெல்லிய இதழ்களில் தனது பருத்த உதடுகளைப் புதைத்தான். சிறிது நேரம் நா எழாமல் திகைத்து நின்றாள் அப் பேதைப் பெண். "அய்யய்யோ கங்காணி என்னை சும்மா விட்டுடுங்க...வேண்டாம்....வீணாவலே என்னைக் கெடுக்காதீங்க'' அலறினாள் அவள். காமத்துக்குத்தான் கண் இல்லை என்கிறார்களே! அவள் அலறலுக்குச் செவி சாய்க்காமலே அவளை அருகிலிருந்த பள்ளத்துக்கு நகர்த்தினான். திடீரென்று அவன் எதிர்பாராத நேரத்தில் அவன் பிடியிலிருந்து திமிறி அப்பால் சென்று, தன் முதுகில் இருந்த தேயிலைக் கூடையை, அவன் முகத்தில் விசிறி எறிந்துவிட்டு ஒரே ஓட்டமாக ஓடினாள். தன் தந்தை காலடியில் விழும்வரையில் திரும்பிப் பார்க்கவேயில்லை.

அடுத்தநாள் எல்லோரும் தோட்டத் துரையின் முன் போய் நின்றார்கள். துரை வழக்கைக் கேட்டுவிட்டு கயமைத்தனம் புரிந்த அக் கங்காணிக்கு அபராதம் போட்டு அனுப்பிவிட்டு அலமேலுவைசிறிது நேரம் கவனித்தான். அவள் அவ்விடத்தக்குப் புது ஆள் என்றும், அவளுக்குத் தோட்டவேலை கடினமானது என்றும் கூறி அவளைத் தன் 'பங்களாவில்' வேலைக்கு நியமித்திருப்பதாகத் தெரிவித்தான்.

'துரை நல்ல மனுஷன் என்று மனதில் புகழ்ந்தவாறே இல்லம் திரும்பினார்கள். அடுத்த நாளிலிருந்து பங்களாவுக்கு வேலைக்குச் சென்றாள்.

என்ன வேலையென்று கேட்காதீர்கள்! எவ்வளவோ வேலைகள்?

ஒருநாள் பங்களா அப்பு (சமையல்காரன்) அவளிடம் வந்து, "அலமேலு துரை உன்னைக் கூப்பிடறார். அவர் படுக்கைக் காம்பிராவை கூட்டவேணுமாம்'' என்றான்.

"துரையா? படுக்கை காம்ராவுக்கா'' அவள் குரலில் அச்சம் தொனித்தது. "ஆமாம்மா சீக்கிரம் வரச்சொன்னார்'' அவன் குரலில் குறும்பு நடனமாடியது.

தடுமாறிக்கொண்டே துரையின் படுக்கையறைக்குச் சென்றாள்.

நடுக்கத்துடன் "கூப்பிட்டீங்களா துரை'' என்றாள்.

"ஆமா இந்தக் காம்பிராவை நல்லாக் கூட்டு''

அவள் மௌனமாகக் கூட்ட ஆரம்பித்தாள். துரை கதவை உள்ளுக்கு இழுத்துப் பூட்டினான். திரும்பிப் பார்த்தாள்! திடுக்கிட்டாள்! "என்னாங்க இது துரை'' அது ஓர் சிறு அலறலாகவே இருந்தது. அதற்குள் அவள் முகம் பயத்தால் வெளிற ஆரம்பித்துவிட்டது.

ஒன்னுமில்லே...இங்கே பக்கத்திலே வா. அன்னைக்கு ஒன்னைப் பாத்ததிலேருந்து நான் பயித்தியமாய் அலையிறேன். அது தீர நீதான்......?'' வார்த்தையை முடிக்கவில்லை. செய்கையில் ஈடுபட்டான். காம வெறிபிடித்துக் கைகளை நீட்டிக்கொண்டு அவளை நெருங்கினான். கபடு ஒன்றும் அறியாத அப் பேதைப் பெண் அவன் சிந்தையில் என்ன ஏந்தி வருகிறான் என்பதை நன்கு உணர்ந்துகொண்டாள். கதவருகில் பாய்ந்தாள். கதவுதான் பூட்டியிருக்கிறதே! ஆத்திரத்துடன் தட்டினாள். கூக்குரலிட்டாள். எல்லாம் முன்னேற்பாட்டுடன் நடக்கும்போது எப்படி உதவி கிடைக்கும்? செய்வதின்னதென்பதறியாது திகைத்துப்போய் கதவின் மேல் சாய்ந்து நின்றாள். தன்னைக் கொல்லவரும் புலியைக் கண்டு தப்பிக்க வழியில்லாது தயங்கி நிற்கும் மானைப்போல் இருந்தது அவள் நிலை. பிடித்த எலியை விளையாட விட்டுவிட்டுப் பூனை சிரித்துக்கொண்டிருந்தது.

துரை, அருகில் நெருங்கி அவள் எலும்பெல்லாம் நொறுங்கும்படி இறுகப்பிடித்து அணைத்து அவள் இதழ்களிலும், நெற்றியிலும், கன்னங்களிலும், கழுத்திலும், மார்பிலும் முத்தமாரி பொழிந்து அவளைப் பேசமுடியாமல் திணறடித்தான். அவள் துள்ளினாள்;

துடித்தாள்; கதறினாள். ஆனால் பயனில்லை.

அவளை அப்படியே அள்ளிஎடுத்துத் தன் படுக்கையில் கொண்டு போய் கிடத்தினான். அவளது கூக்குரல் சிறிது நேரத்தில் நின்றுவிட்டது? அறையின் கதவு பல மணி நேரங்கள் திறக்கப்படவேயில்லை?

பிறகு கதவு திறக்கப்பட்டது. கலைந்த ஆடை உடலில் துவள, இருண்ட உள்ளத்தில் துன்பச் சுமையைத் தாங்கி, வெளிறிய முகத்தில் பற்கள்பட்டு சிவந்த சின்னங்களோடு, துவண்டு, தள்ளாடி, வெளியே வந்தாள் அலமேலு. கவிழ்ந்த தலை நிமிராமல் வீட்டிற்குச் சென்று 'எங்கே மகளை இன்னும் காணோமே'? என்று ஏங்கி நின்ற தன் தந்தையின் காலடியில் 'அப்பா நான் என்னத்தை அப்பா சொல்லுவேன்' என்று அலறிக்கொண்டு வீழ்ந்தாள்.

"என்னாம்மா இது? யார் ஒன்னை என்ன செஞ்சா?" என்று அவள் முகத்தைத் தூக்கினான். அங்கு அவள் சீர்அழிக்கப்பட்டகதை நன்கு சித்திரிக்கப்பட்டிருந்ததைக் கண்டான்.

'அப்பா.....துரை...துரை......? அவளால் பேச முடியவில்லை. தேம்பித்தேம்பி அழுதாள்.

"துரையா இப்படி ஒன்னை அலங்கோலம் செஞ்சான்"

வேறொன்றும் அவனால் பேச முடியவில்லை. அவளை உதறித் தள்ளி விட்டு, கத்தியொன்றை இடுப்பில் சொருகிக் கொண்டு நடந்தான் சீற்றமிக்க சிங்கம் போல. நேராகப் பங்களா சென்றான். துரையையும் கண்டான். ஆத்திரம்தீரப் பேசினான். அவன் பேசுவது ஞாயந்தான் என்று கருதினானோ என்னவோ, துரை அமைதியுடனேயே கேட்டுக் கொண்டிருந்து விட்டு, உள்ளே சென்று, ஓர் ஆயிரம் ரூபாயை எடுத்து வந்து அவனிடம் நீட்டி, ரூபாயைப் பெற்று நடந்ததை மறந்து, ஊர் சென்று அவளுக்கு எப்படியாவது சீக்கிரம் கல்யாணத்தை முடிக்கச் சொன்னான். அவனது அச் செய்கை பரதேசியின் வெந்தபுண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோலிருந்தது. ரூபாயைப் பிடுங்கி அவன் முகத்தில் எறிந்தான். தொடர்ந்து ஒரு அறை, துரை கீழே விழுந்து விட்டான். 'எதிர்பாராத இந்த 'அர்ச்சனையைக்கண்டு' துரை திகைத்துவிட்டான். ஆனால் இன்னும் எதிர்பாராத காரியமெல்லாம் பரதேசி செய்தான். திடீரென்று அவன் நெஞ்சின்மீது பாய்ந்து, அவனது கரங்களைத் தனதுமுழங்கால்களால் அமுத்திக்கொண்டு, இடதுகரத்தால்அவன் கழுத்தைப் பிடித்து உலுக்கிக்கொண்டே,

"பணத்துக்காக மானத்தைத் துறக்கிற ஜாதி நாங்க இல்லேடா. மானத்துக்கு ஈடு பணமில்லே. உன் இருதயத்திலிருந்து கொப்பளித்து வறப்போகிற இரத்தம்... இரத்தமடா! எந்த இருதயத்திலே கெட்ட எண்ணத்தே வச்சிருந்தியோ அந்த இருதயத்தை இந்தக் கத்தி தேடப்போவுது.......... இந்தா......... வாங்கிக்க........."

என்று கூறிக்கொண்டே பளபளவென்று ஒளி வீசும் கத்தியை ஓங்கினான்.

ஆனால் பாய்ச்ச முடியவில்லை. அதற்குள் கும்பல் கூடி அவனை அச்செய்கையினின்றும் தடுத்து விட்டார்கள். அவன் மயக்கம் போட்டு விழும்வரை நையப் புடைத்தார்கள். பிறகு நீதி மன்றத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு 'மாரியாத்தா தயவிலே' அவனுக்கு, கொலைசெய்ய முயன்ற குற்றத்திற்காக பன்னிரண்டுவருடம் சிறைவாசம் கிடைத்தது. வாழ்க்கை வளமாகும் என்றெண்ணி கடல் கடந்து சென்றான். ஆனால் வழுக்கி தீக்குழியில் வீழ்ந்துவிட்டான்.

அவள்.........!ஆலையில் சாறு உறிஞ்சப்பட்ட கறும்பு சக்கை தானே? எங்காவது வீழ்ந்து மாண்டு கருகிப்போயிருப்பாள். ஒருசமயம் உயிரோடு இருந்து இந்நாடு திரும்பிவந்திருந்தால், எங்காவது ரயில் நிலையத்திலோ, பஸ் நிலையத்திலோ காபிஹோட்டல்களின் முன்னாலோ, மார்பில் வத்திப்போயிருக்கும் குழந்தையொன்றைத் தாங்கி, கையை ஏந்தி "அண்ணா......அண்ணா......ஒரு காலணா போடுங்க அண்ணா...... இந்தப்பிள்ளையைப் பாருங்க அண்ணா.....பார்த்து மனமிரங்கி போடுங்க அண்ணா அண்ணா...... அண்ணா................." என்று இறைஞ்சிக்கொண்டிருப்பாள்.

—ரெங்கராஜன்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கொவ்வா முறைகளை ஒழித்துப் புதியதோர் சமுதாயம் நிறுவப் பிரச்சாரம் செய்துவந்தால், முக்காலணாபூணூல் அணிந்த புரோகித வர்க்கம் நமக்கு நாஸ்தீகர்கள் என்ற பட்டத்தைத் தருகிறது.

மறுபடியும் ஒருமுறை மேலே கண்ட பாடலைப் படியுங்கள்! படித்துவிட்டீர்களா? இல்லை— இல்லை! எதற்கும் மற்றுமோர் முறையும் அறிவுக் கண் கொண்டு பாருங்கள்! பார்த்தால் போதாது —படியுங்கள்!

சரி! பார்த்திருப்பீர்கள் அதனை! இப்பொழுது கூறுங்கள் அயோக்கியத்தனமான—ஆபாசங்கள் நிறைந்த—அறிவுக்குப் பொருந்தாத இத்தகைய கட்டுக்கதைகளை எழுதிவைத்தவர்கள் நாஸ்தீகர்களா?-அன்றி இவற்றை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறி நல்லதோர் சமுதாயம் நிறுவ நற்பணியாற்றிவரும் நாங்கள் நாஸ்தீகர்களா?

தீர்ப்பை எங்களிடம் சொல்லாதீர்கள்! அதோ! அங்கே......அக்கிரகாரத்திலே......"மதம் போச்சு மதம் போச்சு, நாஸ்தீகம் பெருத்துப்போச்சு" என்று ஒப்பாரி வைக்கின்றனரே,ஊராரின் உழைப்பால் உண்டுகொழுத்த ஊதாரிகள் அவர்களைப் பார்த்து சொல்லுங்கள்!

தீர்ப்பை உடனடியாகச் சொல்லாவிடினும், இன்னும் சில ஆணித்தரமான ஆதாரங்களை நான் உங்களுக்கு எடுத்துத் தந்தபிறகாவது கூறுங்கள்.

முன்னர்க் குறிப்பிட்ட நான்கு புண்ணிய ஸ்தலங்களிலுமுள்ளோர் அவ்விடங்களை விட்டுப் பழனி, இராமேசவரம், திருப்பதி முதலிய வேறுபல இடங்களை விசேஷமானவைகளாகக் கருதி, அவ்விடங்களுக்கு யாத்திரை செய்யும் போது அங்கு வாழும் மக்கள், "இவர்கள் என்ன புத்தி கெட்ட மடையர்களாயிருக்கிறார்களே!" என்று தூற்றமாட்டார்களா? அவர்கள் வசிக்கிற இடங்களிலுள்ள புண்ணியஸ்தலங்களின் பேரில் உறுதியான நம்பிக்கையும் —உண்மையான பக்தியும் இருந்தால், வீண் பணச் செலவு செய்து வேற்றிடங்களுக்குப் போவார்களா? இதனால், அவர்களுக்கே,

தங்கள் உள்ளூர்க் கோவில்கள்—கடவுள்கள்மீது நம்பிக்கை இல்லை என்றுதானே தெரியவருகிறது!

காசி போன்ற புண்ணிய ஸ்தலங்களில் இருக்கும் கோவில் பெருச்சாளிகளான குருக்கள் பஞ்சமா பாதகங்களையும் கூசாமல்—அஞ்சாமல் செய்து வருவதை நாடறியுமே! சிதம்பரத்தைத் தரிசித்த பக்த கோடிகட்குத் தேவர்களும் கண்டறியா மோட்சம் கிடைக்குமென்று அருணகிரி புராணம், அருணைமா நகரச்சருக்கம் 11-ம் பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால்......அந்தோ!......பாவம்!......அந்த நிர்ப்பாக்கியமுள்ள தேவர்களுக்கு—அந்தரத்திலிருக்கும் இந்திரலோக வாசிகளுக்கு, அவர்களறியாத புதியதோர் மோட்ச சாம்ராஜ்யத்தைப் பார்க்க ஆவலுதிக்காத காரணம் என்னவோ யார் அறிவார்? மேலே கூறிய புராணம் 9-ம் பாடலில் காசி நகரம், சொர்க்கத்தைப் பார்க்கினும் சிறப்புடையது என்று சொல்லப்பட்டிருக்கிறதே! புராண இதிகாச காலத்திற்குப் பிறகு நாகரீக மடைந்துள்ள இந்நாளில் காசி மாநகர் சிறப்பில் அதிக உயர்வு பெற்றுத் திகழ்வதை அந்த புராணிகர்கள் (புரட்டுக்காரர்கள்) கண்டால், எந்த மோட்சலோகத்திற்கு அதனை ஒப்பிட்டு வர்ணிப்பரோ தெரியவில்லை!

இந்துமதகர்த்தாக்களே!-மதப்பாதுகாவலாளரே! உங்களுக்குக் கிடைக்கப்போகிற மோட்ச லோகத்தையும், காசிப்பட்டணத்தையும் புராணிகர் கண்டுதான் இவ்வாறு உரைத்தனரோ அல்லது மனம் போன போக்கில் கற்பனைக்கதைகளைக் கூறினரோ என்பதை நீங்களே சிந்தித்துப் பார்த்து தீர்ப்புக் கூறுங்கள்.

இரும்பை விழுங்கினவன், அது ஜீரணிக்க சுக்குக் கஷாயம் சாப்பிட்டது போல உள்ளன இந்தப் புராணிகர்கள் எழுதி வைத்த புரட்டுக்களனைத்தும் என்பதே எனது தீர்ப்பு!

இந்தத் தீர்ப்பை நானாகக்கூறிவிடவில்லை. இதோ! உங்களுடைய இந்துமத ஞானிகள்—அவர்களையே பேசவைக்கிறேன். கேளுங்கள் அவர்களது நல்ல தீர்ப்பை!

சிவவாக்கியருடைய வாக்கு!

*தூரதூர தூரமென்று சொல்லி*
*யோடும் வீணரே*
*பாரும் விண்ணு மெங்குமாய்ப்*
*பரந்த மெய்ப் பராபரம்*
*ஊரு, நாடு, காடுபோ யுழன்றுதேட*
*வேண்டுமோ*
*நேரதாக வும்முள்ளே*
*நினைத்தறிந்து கொள்ளுமே"*

தாயுமானவர் வாக்கு!

"எங்கணும் நீயென்றால்
இருந்தபடி எய்தாமல்
அங்குமிங்கு மென்றலைய
லாமோ பராபரமே"
"எட்டுத் திசையுமொன்றா
யின்பமாய் நின்றவுன்னை
விட்டுப் பிரியவிடம்
வேறோ பராபரமே"
"ஆழித்தரும்பெனவே
அங்குமிங்கு முன்னடிமை
பாழிற்றிரிவதென்ன
பாவம் பராபரமே"

தோழர்களே! மேற்கண்டவாறு உரைத்துள்ள உங்களது ஞானிகளின் வாக்கைக் கவனித்தாவது உங்களது வீடு வாசல்களையும், பெண்டு பிள்ளைகளையும், தொழில் வகைகளையும் விட்டு விட்டு நிறைய பொருட் செலவு செய்து, சுகத்தைக் கெடுத்துக் கொண்டு புண்ணியம் சம்பாதிக்க காசி, காசியென்று போய், அங்குள்ள வழிப்பறிக்கள்ளர்களாலும், கோயில் குருக்கள்களினாலும் கொள்ளையடிக்கப்பட்டு மோசம் போகும் கொடிய ஆபத்தைத் தவிர்க்க—மூடபக்தியை முறியடிக்க முன்வாருங்கள்! 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உயரிய தத்துவத்தை—தமிழர் பண்பாட்டை மதித்து நடவுங்கள்!

தீர்த்தம்.

ஸ்நானம் செய்ய வேண்டிய விதிகளையும், புண்ணிய தீர்த்தங்கள் என்று கூறப்படும் நதிகளையும் 'புண்ணிய தீர்த்தங்கள்' என்ற தலைப்பில் அடுத்து எழுதுகிறேன். விரிவஞ்சியே இங்கு அதுபற்றி எழுதாது விடுக்கிறேன்.

வெண்ணீறும் உத்திராட்சமும்.

சிவன் பிரமகத்தி கொண்டு சுடுகாட்டில் வாழ்ந்து வருங்காலத்தில் சுடலைச்சாம்பலைத் திருநீறாகவும் எலும்பு பாம்பு முதலியவற்றை மாலைகளாகவும் உபயோகித்துக் கொண்டாராம்! எனவே, அதற்குப் பதிலாக மாட்டுச்சாணத்தை நீற்றிப் பூசிக்கொண்டு, வடநாட்டு மலைகளிலுள்ள ஒருவகை இலந்தைக்கொட்டையைக் கழுத்தில் கோத்துக் கட்டிக்கொள்வார்கள், சிவபக்தர்கள்! இவைகளை அணிந்து கொண்ட சிவனடியார்களுக்குச் சொர்க்கம் கிடைக்குமென்று அறிவைப் பாழாக்கும் கதைகள் புராணங்களில் எழுதப்பட்டுள்ளன.

ஒரு கதை! — சிறுவர்க்கான கதையல்ல — பெரியோருக்கென எழுதி வைத்த புண்ணிய கதை!

பாண்டிய நாட்டில் ஒரு பார்ப்பனன் ஸ்திரீ லோலனாகத் திரிந்து பஞ்சமா பாதகங்களையும் கூசாமல் செய்து வந்தான். ஒரு நாள் ஒரு புலைமகளுடன் கூடிக்களித்திருக்கையில், அவளது கணவனால் கண்டு பிடிக்கப்பட்டு, வெட்டுண்டு, வேலிக்கப்பால் தூக்கி யெறியப்பட்ட விடத்தில், அவனது பிரேதத்தைக் கண்ட ஒரு நாய், தான் படுத்திருந்த குப்பைக் குழியைவிட்டு தன் காலிலொட்டிய சாம்பலோடு அப் பிரேதத்தை மிதித்துத் தின்னும்பொழுது, அதன் காலிலிருந்த சாம்பல் பிரேதத்தின்மீது பட்டதினால், சிவன் அந்த மாபாவியின் பாபங்களை மன்னித்து அவனைக் கைலாயத்திற்குக் கொண்டுவரும்படி உத்தரவிடவே, சிவகணங்கள் யமகணங்களோடு கடும் போரிட்டு வெற்றிபெற்று அவனை சிவனிடம் கொண்டுபோய் விட்டார்களாம். அந்தப் பார்ப்பனன் செய்த கொடிய பாவங்களுக்கு அவன் பெற்ற பரிசு சொர்க்கம்! குப்பைக் குழிச் சாம்பல் அவன் மேல்பட்ட காரணத்தால்!

இவ்வாறாக சிவனார் குப்பைச் சாம்பலுக்கே மதிப்பளிக்கும் பொழுது, சிவன் வாசம்பண்ணின சுடுகாட்டை மிதித்தாலும் நீட்டு என்று குளிப்பானேன்?

கத்தோலிக்க கிருஸ்துவ ஆலயங்களிலே ஒரு வழக்கமுண்டு! அதாவது பாவம் செய்தவர்கள் பாதிரியாரிடம் சென்று தாங்கள் செய்த பாபங்களை ஒன்றன்பின் ஒன்றாய் எடுத்துக் கூறி மன்னிப்புக் கேட்டால், அந்தக் கடவுளின் பிரதிநிதிகள் ஒரு பாப மன்னிப்புச் சீட்டை சொற்ப விலையின் பேரில் கொடுத்து, அவர்களது

## திராவிட இளைஞர் மறுமலர்ச்சிக் கழகம்.

குன்னூர், ஜூன் 27.

மேற்கண்ட கழகச் சார்பில் 26-6-49 மாலை 5 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது தோழர் ஆ.ல. நாராயணன் தலைமை ஏற்றார். "ஆளவந்தாரும், அடக்கு முறையும்" என்பதுபற்றி தோழர் கோவிந்தன் சொற்பொழிவாற்றினார், அவர் குறிப்பிட்டவை:- ஆளவந்தார் தம் அடக்குமுறை மூலம் 13000 ரூபாய்கள் அல்ல, 13000 இளைஞர் தலைகளைக் கொய்து தரச் சொல்லட்டும். நாங்கள் தயாராக உள்ளோம். எங்களுக்கு உயிர் பெரிதல்ல. இனம் பெரிது, நாடு பெரிது, நாகரிகம் பெரிது. இனத்தின் பேரால், ஆட்சியின் பேரால் அடக்குமுறையைப் பயன்படுத்தலாம். எங்களைப் பலியிடலாம். ஆனால்கிலிநீங்கியபுலிகள்நாங்கள். எங்களிடம்சீற்றல் அதிகமல்லஆற்றல் அதிகம். அடக்குமுறை என நீங்கள் வீசும் அவ்வளவு தோட்டாக்களும் எங்கள் வயிற்றில் அடங்குமே தவிர வேதனை தராது. நாங்கள் வளருவோம், வாழ்வோம் தனிநாடு பெற்று. அச்சமயம் தாமரைக்கண்ணி என்ற சிறுபெண் 61 காலணாக்கள் அடங்கிய ஒரு சிறு பையை விடுதலைக்கு நன்கொடையாக அளித்தாள். பின்னர் பழ. கிருட்டினசாமி அவர்கள் பேசினார். தலைவர் தம் முடிவுரையில் "இன்றைய ராமராஜ்பம்" என்பதுபற்றி அன்றைய ராமனாட்சியை ஒப்பிட்டுப் பேசினார். செயலாளர் நன்றி கூற, தமிழன்பன் "விடுதலை நன்கொடை" பண் பாடக் கூட்டம் முடிவுற்றது.

பாபங்கள் மன்னிக்கப்பட்டதென்று கூறுவார்களாய்!

அதுபோல, ஏன் இந்த சிவ பக்தர்களும் கொடிய பாபங்களைச் செய்துவிட்டு சுடலைச் சாம்பலை பூசிக்கொள்ளக்கூடாது? சுடலைச் சாம்பல் பட்டாலே பாபங்கள் பறந்தோடுமென்று அவர்களது புராணங்களே கூறுகின்றனவே!

சிவஸ்தலம் என்றால் சிவனாகிய ருத்திரனுடைய பூமி என்றுதானே பொருள்! அப்படியானால் ருத்திர பூமியைச் சுடுகாடு என்று கூறும்வாய், சிவஸ்தலங்களையும் சுடுகாடு என்று கூறாதது ஏனோ? ஊராரின் உழைப்பால் உண்டு கொழுத்த ஊதாரி உஞ்சிவிருத்திகளின் சூதுச் செயல்கள் தானே இவை அனைத்தும்!

(தொடரும்)

(2ம் பக்கத்தொடர்ச்சி)

'பத்திரிகா தர்மம் இது' என பாருக்கு பகர்ந்துவரும் ஆரியமே உனையொன்று கேட்கின்றோம். உன் வாழ்நாளில் ஒரு நாள் ஒரு பொழுதாகிலும் பாட்டாளியின் நிலை பற்றியோ, பரந்து நிற்கும் பஞ்சம் பற்றியோ, ஒரு புடவை கட்டினால் மறு புடவைக்கு வழியற்று விம்மி அழும் இந்நாட்டின் பழங்குடி பெண்மக்களின் அவல நிலை பற்றியோ, அவர்கள் தம் குழந்தைகள் தற்குறித்தனம் பற்றியோ ஒரு வரி எழுதியதுண்டா? கல்லூரியில் இடமில்லை என்று கனத்தகுரலில் கூவும் உன் கண்களுக்குத் தெரியாது இவைகள். தெரிந்தாலும் உனக்கெப்படி உண்டாகும் அதுபற்றிய கவலை?

சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் இம்மூன்றும் தனது இருதய கீதமென கொக்கரித்த ஆரியமே! அறநிலைய-பாதுகாப்புச் சட்ட திருத்த மசோதா அறிவிற்கும், இயற்கைக்கும் மாறுபட்டதென வாதாடும் உனது நிலை கண்டு இரங்குகிறோம். திரை மறைவிலிருந்து வேலைசெய்தாலும் நின் அருட்சோதி—சுயரூபம் எங்கணும் பிரகாசிக்கிறது—முகமூடி கிழிந்துவிட்டது. இன்று உலகம் உன்னை ஓரளவாகிலும் புரிந்துகொண்டு விட்டது. எனவே இனி,

காந்தீயம் பேசாதே!
கதருடுக்காதே!
பாரதி கீதம் பாடாதே!

இம்மூன்றும் உனது இன்றைய நிலைக்கு மாறுபட்டது-விலகிநில்; அந்தணர் போர்வையில் அரங்கம் கண்ட ஆரியமே, உடனே விலகிநில்.

—மயிலை நாதர்.

### மறைவு

ஈரோடு நகர திராவிடர்கழக முன்னாள் அமைப்பாளர் தோழர் ஈ. கே. கருப்பையாவின் மாமனார் தோழர் வையாபுரி சேலம் மாவட்டம் பாப்பாம் பாளையத்தில் 17-6-49ல் இயற்கைஎய்தினார்.

## பார்ப்பனக் குறும்பு.

அண்ணாமலைப் பல்கலைக் கழக என்ஜினீயரிங் கல்லூரியில் இவ்வாண்டில் சுமார் 60 மாணவர்களுக்குத்தான் இடமிருக்கிறதாம். இதற்கு 1000 மாணவர்கள் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது? எப்படித் தீர்த்தால் நியாயம், முறை?

இதைப் பார்ப்பன நிருபர் ஒருவர் பத்திரிகைக்கு எழுதி, பெற்றோர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் ஒரு நூதனமான சரடு விடுகிறார்.

பெற்றோர்கள் என்ன கவலைப்படுகிறார்கள் என்றால், இந்தப் பிரச்சினைக்கு சர்க்கார் உடனே கம்யூனல் ஜீ. ஓவை எடுத்துவிட நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்றுதான் கவலையாம்.

60க்கு 1000! இதைத் தீர்க்கும் முறை கம்யூனல் ஜி. ஓ. வை எடுத்துவிடுவது. இது பார்ப்பனக் குறும்பைத் தவிர வேறு என்ன?

## அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி சொற்பயிற்சி மன்றம்.

வெலிசரை ஜூன் 20

நேற்று மாலை 6மணிக்கு ஷை மன்ற ஆரம்பவிழா தோழர் பி. டி. லூக்கஸ் தலைமையில் நடந்தது. தோழர் சீனிவாசகம் இன்னிசைக்குப்பிறகு தோழர் பி. எஸ். துரைசாமி அனைவரையும் வரவேற்றார். தோழர் ஒ.ஆ. மா. சாமி மன்றத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தோழர் கு. யா. திராவிடக் கழல் மறைந்த மாவீரன் அழகிரியின் படத்தைத்திறந்து வைத்தார். தோழர்களான எஸ். பாலையா, டி. முனுசாமி ஆகியோர் சொற்பொழிவுக்குப் பின் தலைவர்முடிவுரை கூற செயலாளரின் நன்றிகூறலுடன் விழா இரவு 10. 30 மணிக்குமுடிந்தது.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.